# திருநள்ளாறு

# சனிப்பெயர்ச்சி

## பலன்கள்

**பலன் தரும்**

எளிய பரிகாரங்களுடன்

2026 to 2028



ஓம் சரவணபவ

மார்ச் 2026 இதழுடன் இலவச இணைப்பு



## திருக்கோவிலூர் பரணிகான்

திருநள்ளாறு

# சனிப்பெயர்ச்சி பலன்கள்

## பலன் தரும் எளிய பரிகாரங்களுடன்

6-3-2026 முதல் 24-4-2028 வரை

•

திருக்கோவிலூர் பரணிதரன்

•

சரவணபவ
வெளியீடு

# யோகப் பலன்களை அடையப்போகும்
# ரிஷபம், கடகம், துலாம், மகரம் ராசியினர்

சனீஸ்வரன் என்றழைக்கப்படும் சனிபகவான் நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம், மாசி மாதம் 22-ஆம் நாள், வெள்ளிக்கிழமை 6-3-2026 காலை 8.26 மணிக்கு வாக்கிய பஞ்சாங்கத்தின் படி கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார்.

கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு மாறுதலாகிச் செல்லும் சனி பகவான் 12 ராசியினருக்கும் கோட்சாரரீதியாக எத்தகைய பலன்களை வழங்குவார் என்பதை இப்புத்தகத்தில் தெளிவாக எழுதியுள்ளேன். சனி பகவான் கோட்சார ரீதியாக மீன ராசியில் சஞ்சரிக்கும் போது சில ராசிகளுக்கு சங்கடங்கள் உண்டாகலாம் என்றாலும், அவர் வக்ரகதியாகும் காலங்களிலும், மற்றும் அஸ்தமனம் ஆகும் காலங்களிலும் அவர்கள் அனுபவித்து வந்த சங்கடங்களில் இருந்து விடுதலை கிடைக்கும்.

பொதுவாக கிரகங்களினால் சங்கடங்கள் உண்டாகும்போது ஆயிரக்கணக்கில் செலவு செய்து பூஜைகள் செய்வதைவிட எளிய பரிகாரங்களை மேற்கொண்டால் போதும் தலைக்கு வந்த துன்பம் தலைப்பாகையோடு போய்விடும். சனிபகவான் உங்கள் ராசிக்கு சங்கடம் வழங்கும் நிலையில் சஞ்சரிக்கிறார் என்றால் அவருடைய ஸ்தலம் நாடிச்சென்று மனமுருக வேண்டி வணங்கி வழிபடுங்கள். அவருக்குரிய கருப்பு நிற வஸ்திரத்தை அணிவித்து எள்ளிலிருந்து பிழியப்பட்ட எண்ணெயை மட்டும் ஊற்றி தீபமேற்றி கருங்குவளை மலர்களால் அர்ச்சனை செய்வதுடன், தயிர் சாதத்தில் எள் கலந்து படையலிட்டு வயது முதிர்ந்தவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் அதை உணவாக வழங்குங்கள். நீதிமானாகிய சனி பகவான் நாடி வந்தவருக்கு நலம் புரிவார். வேண்டி நிற்பவருக்கு வாழ்வளிப்பார்.

மீன ராசியில் சனிபகவான் சஞ்சரிக்கும்போது, 12 ராசியினருக்கும் சனிபகவானால் உண்டாகக் கூடிய நன்மைகளையும் சங்கடங்களையும் பலன்களில் எழுதி உள்ளேன். உங்கள் ராசிக்கு சனி பகவானால் உண்டாகக்கூடிய கோட்சார பலனாகவே இதை நீங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

உங்கள் ஜனன ஜாதகத்தில் அமைந்துள்ள கிரகங்களின் அமைப்பையும், தற்போது உங்களுக்கு நடைபெற்றுவரும் தசா புக்தியையும் வைத்து இப்பலன்கள் யோகப் பலன்களாக மாறுவதற்கும் வாய்ப்புண்டு. சனிப்பெயர்ச்சி உங்களுக்கு பாதகமான பலன்களை வழங்கும் என்றாலும், உங்கள் ஜனன ஜாதகத்தில் சனிபகவான் அமர்ந்துள்ள ஸ்தானத்தை வைத்து பலன் மாறுபடவும் செய்யும். அதேபோல் நட்பான தசா புக்தி நடைபெற்றாலும் பாதகமான பலன் மாறக்கூடும்.

| | | | |
|---|---|---|---|
| சனி சுக்கிரன் | | | குரு (வ) |
| செவ்வாய் சூரியன் புதன் (வ) ராகு | 6-3-2026 சனிப்பெயர்ச்சி | நடைபெறும் நாளில் கிரகநிலை | |
| | | | கேது |
| | | | சந்திரன் |

| | | | |
|---|---|---|---|
| மீனம் ஜென்ம சனி | மேஷம் விரய சனி | | |
| கும்பம் பாத சனி | 6-3-2025 | சனி பகவானில் சஞ்சார நிலை | |
| | | | சிம்மம் அஷ்டமச் சனி |
| தனசு அர்த் தாஷ்டமச் சனி | | | கன்னி கண்டச் சனி |

பொதுவாக, ஜென்மத்தில் சனி நிற்பதால் வியாதி வரும். இரண்டில் உயிருக்கு பயம். நான்கில் வேறு நகரம் குடி போகுதல். ஐந்தில் புத்திர சோகம். ஏழில் மனைவிக்கு தோஷம். எட்டில் வியாதி. பத்தில் ஜீவன பங்கம். பனிரெண்டில் தரித்திரம், விரயம் உண்டாகும் என்று பொதுப்பலன் கூறுகிறது.

உங்கள் ஜனன ஜாதகத்தின் அடிப்படையிலேயே நற்பலன்களும் தூர்ப்பலன்களும் உண்டாகும் என்றாலும் சனிபகவானை பணிந்தோர் கைவிடப்படார் என்பதே உண்மை. காரணம், சனிபகவான் நியாயம் தவறாதவர், துஷ்டர்களை அடக்கி அவர்களுக்கு தண்டனை அளிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும், அவரவரின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அவர்களுக்குரிய பலன்களை வழங்கவும், ஆயுள் காலத்தை நிர்ணயம் செய்யவும் இறைவனால் படைக்கப்பட்டவர். அவருக்கு உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதம் எல்லாம் கிடையாது. யாராக இருந்தாலும் தக்க நேரத்தில் அவர்களைப் பற்றி, அவர் அவருடைய கர்ம வினைக்குரிய விதிப்பயனை வழங்கும் பொறுப்பை செய்து வருபவர் சனிபகவான். ஜாதகத்தில் எந்த கிரகத்திற்கும் இல்லாத வலிமை அசுப கிரகம் என்று பெயர் பெற்ற சனி பகவானுக்கு மட்டுமே உண்டு! தேவாதி தேவர்களெல்லாம் கூட சனி என்றாலே அஞ்சி நடுங்குவர்!

சனி பகவான் கெடுப்பவர் மட்டும் இல்லை, யாவற்றையும் கொடுக்கவும் செய்பவர் என்றும் சொல்வர். எனவேதான் சனியைப்போல் கெடுப்பாருமில்லை! சனியைப் போல் கொடுப்பாருமில்லை என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது! ஜாதகரின் ராசிக்கு 12 ம் வீட்டில் சனி சஞ்சரிக்கும்போது ஒருவருக்கு ஏழரைச்சனி ஆரம்பம் ஆகிறது. அங்கிருந்து ஜென்ம ராசியிலும், அதன் பிறகு இரண்டாம் வீட்டிலும் சனிபகவான் இருக்கும் காலம் வரை அவருக்கு ஏழரைச்சனிக்குரிய காலமாகும். ஏழரைச்சனியின் முதல் சுற்று நடைபெறும் போது ஜாதகருக்கு சோதனைகளை ஏற்படுத்தி மங்கு சனியாக விளங்கும் சனிபகவான், இரண்டாம் சுற்றின்போது பொங்கு சனியாக மாறி

நன்மைகளை வாரி வழங்குகிறார்.

சந்திரன் நின்ற ராசிக்கு நான்காம் வீட்டில் சஞ்சரிக்கும் காலம் அர்த்தாஷ்டமச் சனிக்குரிய காலமாகவும், எட்டாம் வீட்டில் சஞ்சரிக்கும் காலம் அஷ்டமச்சனிக்குரிய காலமாகவும், ஏழாம் வீட்டில் சஞ்சரிக்கும் காலம் கண்டக சனிக்குரிய காலமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். இக்காலங்களில் ஜாதகருக்கு பல்வேறு சோதனைகளை வழங்கிடுவார் சனிபகவான். ஏழரைச்சனி நடைபெறும் காலத்தில், வாகன விபத்து, உடல்நலக்குறைவு, அறுவை சிகிச்சை, புதிய நண்பர்களால் சங்கடங்கள், தொழிலில் நஷ்டம், கடன் தொல்லை, எதிர்ப்பு, பகை, ஊர்விட்டு ஊர் மாற்றம், கண்களில் பாதிப்பு, மனக்குழப்பம், பொருள் இழப்பு, நம்பியவரால் ஏமாற்றம், பிரச்சனைகள், வழக்குகள், ரத்த உறவுகளுக்குள் பகை, சொத்து இழப்பு என்று அவரவர் பாவ புண்ணியங்களுக்கேற்ப தண்டனைகளை வழங்குவார் சனி பகவான் என்றாலும், ஜாதகரின் ஆயுளுக்கு இக்காலத்தில் அவர் முடிவை உண்டாக்க மாட்டார்! உயிரை எடுக்க மாட்டார்! அதற்கு காரணம், உயிரை நிறுத்தி அந்த ஜாதகருக்கு வேதனைகளையும் சோதனைகளையும் வழங்கி அவர் செய்த பாவங்களை நினைத்து நினைத்து அவர் வருந்த வேண்டும் என்பதற்காகத்தான்!

ஆயுள்காரகன், கர்மக்காரகன், தொழில் காரகன் என்று அழைக்கப்படும் சனி பகவான் மீன ராசியில் சஞ்சரிக்கும் காலத்தில், மீன ராசியினருக்கு ஜென்ம சனியாகவும், மேஷ ராசியினருக்கு விரய சனியாகவும், கும்ப ராசியினருக்கு பாத சனியாகவும், தனுசு ராசியினருக்கு அர்த்தாஷ்டமச்சனியாகவும். சிம்ம ராசியினருக்கு அஷ்டமச் சனியாகவும், கன்னி ராசியினருக்கு கண்டக சனியாகவும் சஞ்சரிக்கப் போகிறார். இதனால், **கும்பம், மீனம், மேஷம், சிம்மம், கன்னி, தனுசு** ராசியினர் சிரமங்களுக்கு ஆளாகலாம், சிரமங்களை சமாளிக்க திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, குச்சனூர் ஆகிய ஊர்களில் எழுந்தருளியுள்ள சனீஸ்வர பகவான் ஆலயத்தை நாடிச்சென்று பரிகாரம் செய்து வருவது நன்மையாகும். வாரம்தோறும் சனிக்கிழமைகளில் நவகிரகத்தில் உள்ள சனீஸ்வர பகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபட்டு வருவதும் சங்கடங்களைப் போக்கும்.

**"காக த்வாஜய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி தந்நோ மந்த; ப்ரசோதயாத்''**

என்ற, சனி பகவானுக்குரிய காயத்ரி மந்திரத்தை நேரம் கிடைக்கும் போதெல்லாம் உச்சரித்து வாருங்கள்! சனீஸ்வர பகவானின் மனம் இளகும்! உங்கள் சங்கடங்கள் விலகும்!

அன்புடன்

**திருக்கோவிலூர் பரணிதரன்**
6/1. கடலூர் மெயின்ரோடு. கீழையூர். திருக்கோவிலூர் - 605757
செல்: 9444 393 717 | 9342 393 717

# மேஷம்

**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1- ஆம் பாதத்தில் பிறந்தவர் களுக்கும்; ஜென்ம ராசி எதுவென்று தெரியாத சித்திரை மாதத்தில் பிறந்தவர்களுக்கும். சு, சே, சோ, லா, லி, லூ, லே, லோ, அ... ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: செவ்வாய்.

நட்சத்திர அதிபதிகள்: கேது, சுக்கிரன், சூரியன்.

பாதகாதிபதி: சனி.

மாரகாதிபதி: சுக்கிரன்.

## மேஷ ராசிக்கு ஏழரை சனி தொடக்கம்! விரய சனி ஆரம்பம்

நினைத்ததை சாதிப்பதில் உறுதியாக இருக்கும் மேஷ ராசியினரான உங்களுக்கு இதுவரையில் உங்கள் ராசிக்கு லாப ஸ்தானம் எனும் பதினொன்றாம் வீட்டில் சஞ்சரித்த சனி பகவான் 6-3-2026 அன்று உங்கள் ராசிக்கு பன்னிரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார்.

பதினொன்றாம் இடத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் யோக காலம் என்றாலும் உங்கள் ராசிக்கு அவரே லாபாதிபதி என்பதால் லாப ஸ்தானத்தில் அவர் சஞ்சரித்த காலத்தில் மிகப்பெரிய அளவில் உங்களுக்கு நன்மைகள் செய்திட வாய்ப்பில்லை என்பதே உண்மை. தொழிலில் எதிர்பார்த்த வருமானம் வந்திருக்காது, வீட்டிலும் மகிழ்ச்சி ஆனந்தம் என்பதெல்லாம் பெயரளவிற்கே இருந்திருக்கும் உங்கள் உடல்நிலை யும் மன நிலையும் பாதிக்கப் பட்டிருக்கும். குடும்பத்திலும் நிம்மதி இருந்திருக்காது. சிலருக்கு தொழில் மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் என்று மாற்றங் களும் ஏற்பட்டிருக்கும். பணம் வந்திருக்கும் என்றாலும் வந்தவழியே போயிருக்கும். சேமிப்பிற்கு வழியில்லாமல் கடன் வாங்கியும் செலவு செய்திருப்பீர்கள்

இத்தகைய நிலையில் லாப ஸ்தானத்தில் சஞ்சரித்த சனி பகவான் 6-3-2026 முதல் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். பிறப்பு ஜாதகத்தில் சனி பகவான் இருந்த ஸ்தானம் எதுவாக இருந்தாலும், கோச்சார ரீதியாக அவர் சஞ்சரிக்கும் காலத்தில் அந்த இடத்திற்குரிய பலன்களை மாற்றமின்றி கொடுத்திடக் கூடியவராவார். அதனால், 12-ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகும் சனி பகவான் உங்கள் வாழ்க்கையில் நிறையவே மாற்றங்களை ஏற்படுத்துவார்.

ஆமாம், சனி பகவான் 12-ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது உங்களுக்கு ஏழரை சனியின் காலம் தொடங்குகிறது.

ஏழரைச் சனியின் முதல் சுற்றை மங்குசனி என்றும், இரண்டாவது சுற்றை பொங்கு சனி என்றும், மூன்றாவது சுற்றை மரணச்சனி என்றும் சொல்லலாம். ஆனால் சனிபகவான் தன்னுடைய ஏழரை சனி காலத்தில் யாருக்கும் மரணத்தை அளிப்பதில்லை. அதற்கு மாறாக அந்த ஜாதகர் சங்கடப்படும் அளவிற்கு நிறையவே பாடங்களைப் புகட்டுவார்.

சரி, ஏழரை சனி காலத்தில் யார் யாரையெல்லாம் பாதிப்பிற்கு உள்ளாக்குவார் என்பதைப் பார்க்கும்போது...

சிம்மம், விருச்சிகம், கும்பம், மீனம், மேஷம், கடகம் ஆகிய ஆறு ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலத்தில் கஷ்ட நஷ்டங்கள் அதிகம் உண்டாகுமாம்.

ஆம், கிரகங்களின் பெயர்ச்சியால் அனைத்து மனிதர்கள் வாழ்க்கையிலும் மாறுபாடுகள் தோன்றும். வறுமையில் வாடியவரை செல்வ நிலைக்கு கோச்சார கிரகம் இட்டுச்செல்லும். செல்வத்தில் புரண்டவரை படு பாதாளத்திலும் தள்ளிவிடும். எல்லாமே கிரகங்கள் செய்யும் வேலைகள்தான். அதிலும், ஆயுளுக்கும், ரோகத்திற்கும், ஜீவனத்திற்கும், விரயத்திற்கும் காரகனான சனிபகவான் எல்லோருடைய வாழ்க்கையிலும் பெரும் பங்கு வகிக்கின்றார். 8,10,12 ம் வீடுகளுக்கும் சனி பகவான் காரகனாகிறார். அதன் காரணமாகத்தான் இந்த இடங்களில் சஞ்சரிக்கும்போது ஜாதகரை அதிகபட்ச சோதனைக்கும் ஆளாக்குகிறார்.

இந்த நிலையில் 6-3-2026 அன்று உங்கள் ராசிக்கு 12-ஆம் வீடான மீனத்தில் ஏழரை சனியின் விரய சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

உங்கள் ராசிக்கு, ஜீவன ஸ்தானத்திற்கும், லாப ஸ்தானத்திற்கும் அவரே அதிபதியாகிறார். மேலும் சொல்ல வேண்டுமென்றால் உங்கள் ராசிக்குள் சஞ்சரிக்கும்போது அவர் பலமிழந்தவ ராக நீச்சமாகி விடுகிறார்.

சனி பகவான் உங்கள் ராசியில் நீசம் அடைந்தாலும், நியாயம் தவறாத நீதிபதியான அவர்,

கோச்சார காலத்தில் ஜாதகருக்குரிய பலாபலன்களை அனுபவிக்க வைப்பதில் கண்டிப்பானவர். அனுபவிக்கும்படி செய்திடக்கூடியவர். ஈசனாகவே இருந்தாலும் அவரையும் சனி பகவான் விட்டு வைத்ததில்லை. அவரவர்களுக்குரிய காலங்களில் அவர்களைப்பற்றி, அவரவரின் பாவ புண்ணியங்களுக்கேற்ப பலன்களை வழங்கிடக் கூடியவர். பாவங்கள் புரிபவர்களுக்கு கடுமையானவராகவும், புண்ணியங்கள் செய்வோருக்கு மென்மையானவராகவும் விளங்குபவர்.

அதன் காரணமாகத்தான் அவர் ஜாதகரைப் பிடிக்கும் ஏழரையாண்டு காலத்தில் அதற்கேற்ப நடந்துகொண்டு ஒரே ராசியினராக இருந்தாலும் ஒருவருக்கு கடுமையான சோதனை களையும், மற்றவருக்கு அவர்களால் சமாளித்திடக்கூடிய அளவிற்கு சாதாரண பிரச்சனை களையும் வழங்குகிறார்.

இந்த நிலைபாட்டின் காரணமாகவே மேஷ ராசிக்காரர்களாகவே இருந்தாலும் ஒவ்வொரு வருக்கும் அவரவரின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மாறுபட்ட பலன்களை வழங்குவார் சனிபகவான்.

இவை எல்லாம் சரி, உங்கள் ராசிக்கு 11-ல் லாப சனியாக கடந்த இரண்டரை ஆண்டு காலம் சஞ்சரித்து, பெயரளவிற்கு உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தையும் அதிக அளவில் போராட்டத்தையும் வழங்கி வந்த சனி பகவான், இப்போது உங்களுக்கு ஏழரை சனியின் விரய சனியாக எப்படிப்பட்ட பலன்களை வழங்கப் போகிறார்?

ஏழரை சனியின் ஆரம்பப் பகுதியான இக்காலத்தில் காரியத்தில் தேக்கமும், வருமானத்தில் குறைவும் உண்டாகும். பொருள் விரயமாகும். வீண் அலைச்சல், மன உளைச்சல் ஏற்படும். மதிப்பிற்கும், கௌரவத்திற்கும் பங்கம் உண்டாகும். குடும்பத்தில் சண்டைகளும் சச்சரவுகளும் பிரிவும் சிலருக்கு ஏற்படும். எதிரிகளால் இடையூறு, தீய வழியில் செல்வதற்கு சந்தர்ப்பம் அமையும் என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

எந்த ராசிக்கு எந்த கிரகம் நன்மைகள் புரியும்? எந்த கிரகம் கெடுதல் புரியும் என்பதையும், எந்த வீட்டில் இருந்தால் எத்தகைய பலன்களை வழங்குவார்கள்? அவர்கள் பார்க்கும் பார்வை களின் வழியாக எத்தகைய பலன்களை வழங்குவார்கள் என்பதையும் ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. அதற்கேற்பவே அனைத்தும் உலகில் நடைபெற்று வருகிறது.

பொதுவாக சனி பகவான் பார்வைக்கு ஆளாகும் இடங்கள் பாதிப்பிற்குள்ளாகும் என்பது விதி. உங்கள் ராசிக்கு 12-ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் அங்கிருந்து உங்கள் ராசிக்கு தனம், குடும்பம், வாக்கு ஸ்தானமான 2-ஆம் இடத்தையும், சத்ரு, ஜெய ஸ்தான மான 6-ஆம் இடத்தையும், பாக்ய ஸ்தானமான 9-ஆம் இடத்தையும் பார்வையிடுகிறார்.

## தன, குடும்ப ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு தன, குடும்ப ஸ்தானமான இரண்டாம் இடத்தை தனது மூன்றாம் பார்வையால் சனி பகவான் பார்ப்பதால் குடும்பத்தில் பிரச்சனைகள் தலைதூக்கும். ஒரு சிலருக்கு குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையும் உருவாகும். பேச்சில் நிலையற்றத் தன்மை ஏற்படும். வாக்குத்தவற நேரும். சந்தோஷம் நிம்மதி என்பது இல்லாமல் இருக்கும். பொருட்கள் களவு போகும். பொருளாதார இழப்பு உண்டாகும். வருமானம் தடைபடும். செலவுகள் அதிகமாகும். குடும்பத்தினர் நடவடிக்கையால் மனம் துன்பமடையும். ஏதேனும் ஒரு சங்கடம் குடும்பத்திற்குள் இருந்து கொண்டே இருக்கும்.

## சத்ரு, ஜெய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு 6-ஆம் இடமான சத்ரு, ஜெய ஸ்தானத்தை தனது 7ம் பார்வையால் சனி பகவான் பார்ப்பதால், உங்கள் ஆரோக்கியம் மேம்படும். நோய்நொடி என்று பாதிக்கப்பட்டிந்த உங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். மனதில் தைரியம் கூடும். எதையோ இழந்ததுபோல் சங்கடப்பட்டு வந்தவர்கள் பலவீனம் நீங்கி வேகமாக நடமாடுவீர்கள். எதிரிகள் யாராக இருந்தாலும் அவர்களை வெல்லக்கூடிய ஆற்றலும், அவர்களை இருக்கும் இடம் தெரியாமல் செய்கின்ற சக்தியும் உங்களுக்கு உண்டாகும். வழக்கத்தைவிட அபார ஆற்றல் படைத்தவராக மாறுவீர்கள். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். வியாபாரம், தொழிலில் இருந்த போட்டியாளர்கள் விலகிச்செல்வார்கள். இழுபறியாக இருந்த பிரச்சனைகளும், வழக்கும் உங்களுக்கு சாதகமாகும். என்பதால், எந்த சூழ்நிலையிலும் வாழ்ந்திடக்கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும்.

## பாக்ய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு 9-ஆம் இடமான பாக்ய ஸ்தானத்தை தனது 10-ஆம் பார்வையால் பார்க்கும் சனி பகவானால், தந்தையின் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படும். ஒரு சிலர் தந்தையை இழக்க வேண்டியதாக இருக்கும். அல்லது பொருளாதார நெருக்கடியால் தந்தை மிகவும் கடுமையான நிலைக்கு ஆளாக வேண்டியதாக இருக்கும். உங்களைவிட மூத்தவர் மற்றும் நெருங்கியவர்களின் வெறுப்புக்கும் பகைக்கும் ஆளாகும் நிலையும் உருவாகும். தொழிலில் தடைகளும், வருமானத்தில் முடக்கமும் உண்டாகும். உறவினர்களின் வெறுப்பிற்கும் ஆளாக வேண்டிவரும்.

## அதிர்ஷ்டம்தரும் அஸ்தமன காலம்

சனி பகவான் மீன ராசிக்குள் சஞ்சரிக்கும் காலத்தில், 12-3-2026 முதல் 11-4-2026

வரையிலும், 25-3-2027 முதல் 24-4-2027 வரையிலும் அஸ்தமனம் ஆவதால் விரய சனியின் பாதிப்புகள் உங்களை நெருங்காமல் போகும். எடுக்கும் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். நினைத்த காரியங்கள் நடந்தேறும்.

## வளம்தரும் வக்கிர காலம்

விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் 15-7-2026 முதல் 31-11-2026 வரையும், மீண்டும் 28-7-2027 முதல் 13-12-2027 வரையும் வக்கிர கதியில் சஞ்சரிப்பார். இக்காலத்தில் விரய சனியின் பாதிப்பிலிருந்து உங்களுக்கு மாற்றம் ஏற்படும். உங்கள் வாழ்வில் உண்டான நெருக்கடிகள், பிரச்சனைகள் நீங்கும். நன்மைகள் அதிகரிக்கும். பல வழிகளிலும் அவதிப்பட்டு வந்த உங்கள் நிலையில் மாற்றம் உண்டாகும். பெரிய பாதிப்புகளில் இருந்து விடுபடுவதுடன், உங்கள் முயற்சியால் வெற்றிக்குமேல் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். திருமணம், வீடு கட்டுதல் என்று சுப நிகழ்வுகள் நடந்தேறும். இக்காலம் உங்களுக்கு சங்கடங்கள் இல்லாத காலமாக இருக்கும். இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வந்ததுபோல் உங்கள் வாழ்வில் ஒரு மாற்றம் இருக்கும்.

## விரய சனியின் பாதிப்பை விரட்டப்போகும் குருப்பார்வை

மீன ராசிக்குள் சஞ்சரித்து உங்களுக்கு விரயத்தையும், சங்கடத்தையும், போராட்டத்தையும் சனி பகவான் வழங்கும் காலத்தில் அவர் சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதியான குரு பகவான், 26-5-2026 முதல் 20-10-2026 வரையிலும், 13-2-2027 முதல் 13-6-2027 வரையிலும், 16-11-2027 முதல் 17-4-2028 வரையிலும் சனி பகவானைப் பார்ப்பதால் தடைபட்ட வேலைகள் எல்லாம் நடந்தேறும். மனதில் நிம்மதி உண்டாகும். குடும்பம், தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

## பரிகாரம்

ஏழரை சனியின் பாதிப்பில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு முறை திருநள்ளாறுக்குச் சென்று, நள தீர்த்தத்தில் நல்லெண்ணெய் தேய்த்து நீராடி விட்டு, ஆலயம் சென்று தர்பாரண்யேஸ்வரருக்கும், சனீஸ்வரருக்கும் அர்ச்சனை செய்து வணங்கி வழிபட்டு வாருங்கள். சனிக்கிழமை தோறும் அருகில் உள்ள சிவாலயம் சென்று சனீஸ்வர பகவானுக்கும் பைரவருக்கும் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வணங்கி வழிபட்டு வாருங்கள். சங்கடங்கள் விலகும்.

# ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4 -ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 -ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும்; ராசி எதுவென்று தெரியாத வைகாசி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; இ, ஊ, ஏ, ஒ, வ, வி, வூ, வே, வோ... ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: சுக்கிரன்.

நட்சத்திர அதிபதிகள்: சூரியன், சந்திரன், செவ்வாய்.

மாரகாதிபதி: சந்திரன், குரு

பாதகாதிபதி: சனி

## ரிஷபத்திற்கு லாப சனி

எந்த ஒன்றிலும் தனித்துவத்துடன் திகழ்ந்திடும் ரிஷப ராசியினரான உங்களுக்கு, இதுவரையில் உங்கள் ராசிக்கு தொழில் ஸ்தானம் எனும் பத்தாம் வீட்டில் சஞ்சரித்துவந்த சனி பகவான் உங்கள் முன்னேற்றத்தில் தடைகளையும், மனதில் நிம்மதி இல்லாத நிலையினையும், உடலில் உபாதைகளையும், செல்வாக்கு, கௌரவம் போன்றவற்றில் பங்கத்தையும், வீட்டிலும் வெளியிலும் பிரச்சனைகளையும், பணப் பற்றாக்குறையையும், வருமானத்தில் சிரமத்தையும், வேலையிலும் தொழிலிலும் சங்கடங்களையும் வழங்கி வந்து உங்களை ஆட்டிப் படைத்தார். முதலீடுகளிலும் எதிர்பார்த்த லாபமில்லாமல் போயிருக்கும். கடன் வாங்கி செலவுகள் செய்து அதற்கு வட்டிக் கட்டுவதற்கும் சிரமப் பட்டிருப்பீர்கள். அலைச்சல், அவமானம், குடும்பத்திற்குள் நெருக்கடி, முயற்சிகளில் தடை, நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்விலும் பிரச்சனை. ஒரு சிலருக்கு மெமோ, சஸ்பென்ஷன் என்ற அளவிற்கு உங்கள் வாழ்க்கைப் போயிருக்கும். எந்த

ஒன்றிலும் நிலையான நிலை இருந்திருக்காது. எதிர்பார்த்த அளவிற்கு லாபமும் கிடைக்காமல் சங்கடத்திற்கு ஆளாகி இருப்பீர்கள்.

கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் நீங்கள் பட்ட சங்கடங்கள் கொஞ்சமா? நஞ்சமா? உங்களைப் பாடாய்ப்படுத்திய பிரச்சனைகளை எல்லாம் நீங்கள் எப்படி சமாளித்து வந்தீர்கள் என்பது உங்களுக்கு மட்டுமே தெரியும். பூமியில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியும் உலகில் வாழ்வதற்கு காரணமாக இருப்பது அதன் உடலில் உள்ள உயிரே ஆகும். அப்படிப்பட்ட உயிருக்கு ஜீவநாடியாக இருப்பவர் உயிர்க்காரகன், ஆயுள் காரகனான சனீஸ்வர பகவான்தான்.

தான் நீண்டகாலம் உயிரோடு இருக்க வேண்டும். தனக்குள் உள்ள உயிர் வெளியேறி விடக்கூடாது என்று ஒவ்வொரு உயிரும் முயல்கின்றன. அந்த உயிரை எத்தனைக் காலம் ஒவ்வொரு உடலிலும் நீடிக்க வைத்திருப்பது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆயுள் காரகத்தின் அதிபதியான சனீஸ்வர பகவான்தான்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் உங்கள் உடலில் உயிர் மட்டும்தான் இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கும் உங்களுக்கு, 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு 11-ம் வீடான மீன ராசிக்குள் லாப சனியாக சஞ்சாரம் செய்யப் போகிறார் சனி பகவன்.

பத்தாம் வீட்டில் சஞ்சரித்து உங்களைப் பாடாய்ப்படுத்திய சனி பகவான் 11 ல் சஞ்சரிக்கும் போது என்ன செய்வார்? என்று நீங்கள் கேட்பது புரிகிறது!

சனி பகவான் ராசி சக்கரத்தை சுற்றிவர 30 ஆண்டுகள் எடுத்துக்கொள்வார். 12 ராசிகளிலும் ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை ஆண்டு காலம் சஞ்சாரம் செய்திடக்கூடியவர். இவருடைய சஞ்சார நிலையை வைத்தே 30 ஆண்டுகள் வாழ்ந்தவரும் கிடையாது 30 ஆண்டுகள் தாழ்ந்தவரும் கிடையாது என்று கூறப்படுகிறது.

ஒவ்வொருவரின் ராசிக்கும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை வழங்குபவர், மூன்று, ஆறு, ஒன்பது, பதினொன்றாம் வீடுகளில் சஞ்சரிக்கும்போது அந்த வீடுகளுக்குரிய பலன்களை மிக மிக யோகப் பலன்களாக வழங்கி அக்காலத்தில் வாழ்வின் மேல்மட்டத்திற்கு கொண்டு செல்வார் சனி பகவான்.

கிரகங்களில், குரு பகவான் அமரும் வீடு பலன் தராது அவர் பார்க்கும் வீடுகள் பலன் தரும். ஆனால் சனி பகவான் எந்த வீட்டில் அமர்கிறாரோ அந்த வீட்டிற்குரிய காரகப் பலன்களை அவரவர் பூர்வ புண்ணியத்திற்கேற்ப வழங்குவார். அவர் பார்க்கும் வீடுகளுக்கும் அந்தந்த வீடுகளின் காரகத்திற்குரிய பலன்களை வழங்குவார். அவர் பார்க்கும் பார்வைகளில் கூட, மூன்று, ஆறு, பதினொன்றாம் வீடுகளில் அவருடைய பார்வை பதியும்போது

அந்த வீடுகளுக்கும் யோகப் பலன்களை வழங்குவார் சனி பகவான்.

உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு சனி பகவான் நட்பு கிரகம் ஆவார். உங்களுக்கு பாக்கியாதிபதியும் ஜீவனாதிபதியும் சனி பகவானே ஆவார்.

இந்த நிலையில் கடந்த இரண்டரை ஆண்டுகள் பத்தாம் இடமான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து, உங்களின் பூர்வ புண்ணியங்களுக்கேற்ப, கர்ம வினைகளுக்கேற்ப பலன்களை வழங்கி வந்த சனி பகவான், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் இக்காலத்தில் பல்வேறு நன்மைகளை உங்களுக்கு வழங்கப் போகிறார். இதுவரை நீங்கள் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் இக்காலம் விடிவு காலமாக மாறப்போகிறது. நீங்கள் பட்ட அவமானங்கள், அடைந்த துன்பங்கள், வலிகள் எல்லாம் விலகப் போகிறது. என்றோ செய்த முதலீடுகளில் இருந்து லாபம் வரப்போகிறது. செய்துவரும் தொழில் மூலம் சிறப்பான வருமானம். வீட்டில் மகிழ்ச்சி. ஆனந்தம் என்ற நிலையும், பொன் பொருள் சேர்க்கையும், எதிர்பாலினரால் முன்னேற்றத்தையும் காணப் போகிறீர்கள். நீங்கள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒவ்வொன்றும் உங்கள் கைக்கு வரப்போகிறது. திருமணம் ஆகாதவர்களுக்கு இக்காலத்தில் அதற்கான வாய்ப்புகள் கூடிவரும். வாழ்க்கைத் துணையை இழந்தவர்களுக்கு புதிய துணை அமையும். ஒரு சிலருக்கு தொழில் மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் என்று வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும். அலுவலகப் பணியில் ஏற்பட்ட பிரச்சனைகள், வழக்குகள் முடிவிற்கு வரும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். முடங்கிக்கிடந்த தொழில் முன்னேற்றம் அடையும். பணப்புழக்கம் அதிகரிக்கும். லாபமும் யோகமும் கூடி பணம், பதவி என்று உங்கள் வாழ்க்கை வளமாகும். இக்காலத்தில் ஒரு சாதனையாளராக நீங்கள் நிமிர்ந்து நிற்க முடியும். நீங்கள் எடுக்கும் முயற்சி ஒவ்வொன்றும் லாபமாகும். செய்துவரும் தொழில் வியாபாரம் அனைத்துமே லாபமடையும்.

பதினொன்றில் சஞ்சரிக்கும் சனி பகவானால் இத்தகைய சிறப்பான பலன்களை நீங்கள் காணப் போகிறீர்கள். இக்காலத்தில் சனி பகவானின் மூன்றாம் பார்வை - உங்கள் ஜென்ம ராசிக்கும், ஏழாம் பார்வை - உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கும், பத்தாம் பார்வை - உங்கள் ஆயுள் ஸ்தானத்திற்கும் உண்டாகும்.

## ஜென்ம ராசிக்கு சனிப்பார்வை

தனது மூன்றாம் பார்வையால் உங்கள் ஜென்ம ராசியைப் பார்க்கும் சனிபகவானால், உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் எண்ணம் நேர்மறையாக செயல்படும். எந்த ஒன்றிலும் நீதி, நியாயம் என்று பார்ப்பீர்கள், பாவ புண்ணியம் பற்றி யோசிப்பீர்கள், நிதானமாக செயல்படுவீர்கள், உங்கள் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் புதிய பொறுப்பு வந்துசேரும். அதனால்

வேலைபளு அதிகரிக்கும், அலைச்சல் உண்டாகும். உடல் நலனில் உபாதை உண்டாகும். ஒரு சிலர் பணி நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியில் செல்லும் நிலையும் ஏற்படும். முந்தைய அனுபவங்களை மனதில் கொண்டு செயல்படுவது இக்காலத்தில் நன்மையை உண்டாக்கும். வாகனங்களில் செல்லும்போது கவனமாக செல்வது அவசியம்.

## பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தை தனது ஏழாம் பார்வையால் பார்க்கும் சனி பகவானால் புத்திரர் புத்திரிகளின் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிவரும். அவர்களைப் பற்றிய கவலை உங்களுக்கு அதிகரிக்கும். அவர் களுடைய உயர்விற்காக முயற்சிகளை அதிகரிப்பீர்கள். வியாபாரத்திலும் தொழிலிலும் கவனம் கூடும். ஷேர் மார்க்கெட் லாபம்தரும். ஒரு சிலருக்கு அசையா சொத்துகள் சேரும். இருக்கும் சொத்துகளில் ஏற்பட்ட பிரச்சனைகள் முடிவிற்கு வரும். நீண்ட நாட்களாக இருந்த குழப்பங்கள் விலகும். பணியாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கும் கலைஞர்களுக்கும் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு வரும்.

## அஷ்டம ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு எட்டாம் இடமான அஷ்டமம் மற்றும் ஆயுள் ஸ்தானத்தை ஆயுள் காரகனான சனி பகவான் தனது பத்தாம் பார்வையால் பார்ப்பதால், உங்கள் திறமைக்கேற்ற வேலைகள் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் முக்கிய பொறுப்புக்கு தேர்வு செய்யப்படுவீர்கள். மறைந் திருந்த உங்கள் திறமையும் செல்வாக்கும் வெளிப்படும் என்றாலும் மறைமுக எதிர்ப்புகளும் தோன்றும். உங்கள் செல்வாக்கை சீர்குலைக்கும் வகையிலும், முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையிலும் உங்களுக்கே தெரியாமல் உங்கள் எதிரிகள் செயல்படுவார்கள். அதனால் உங்கள் மனநிலையும், உடல்நிலையும் பாதித்திடக்கூடும் என்பதால் இக்காலத்தில் ஒவ்வொரு செயலி லும் விழிப்புணர்வு அவசியம். ரகசிய கேமராக்கள், நீங்கள் பேசுவதைப் பதிவு செய்து அம்பலப் படுத்துவது என்ற நிலைக்கும் சிலர் செல்வார்கள். வியாபாரிகள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும். ஒருசிலர் அபராதம் கட்ட வேண்டிய நிலைக்கும் ஆளாக வேண்டிவரும். வாகனப் பயணத்தில் விபத்து, தொற்றுநோய் என்ற தொல்லைக்கும் சிலர் ஆளாக வேண்டிவரும் என்பதால் அனைத்திலும் நிதானமும் எச்சரிக்கையும். கவனமும் இக்காலத்தில் தேவைப்படும். பெண்கள் கணவரை அனுசரித்துச் செல்வதும், கணவரின் உடல்நிலையில் அக்கறையாக இருப்பதும் அவசியம்.

## அதிர்ஷ்டம் தரும் அஸ்தமன காலம்

சனி பகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்களை முன்னேற்றத்தை நோக்கி நடைபோட

வைத்தாலும் அவருடைய பார்வைகள் இக்காலத்தில் உங்களுக்கு மைல் கற்களாக இல்லாமல் தடைக்கற்களாக இருக்கும். 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலும் அஸ்தமனம் அடைவதால் தடைகள் விலகும். எதிர்பார்த்த மாற்றம் ஏற்படும்.

## வளம்தரும் வக்கிர சனி!

சனிபகவான் இரண்டரை ஆண்டுகள் ஒரு வீட்டில் சஞ்சரித்தாலும் அந்த வீட்டில் ஒரே நிலையில் சஞ்சரிப்பதில்லை. ஆண்டுதோறும் நான்கரை மாதங்கள் அவர் வக்கிர கதிக்கு ஆளாவார். அக் காலங்களில் சங்கடமான பலன்களை சந்தித்து வந்தவர்களுக்கு பாதிப்புகள் குறையும். யோகமான பலன்களை சந்தித்து வந்தவர்களுக்கு நிதானித்து செயல்பட வேண்டிய நிலை உண்டாகும். அந்த நிலையில், 15-7-2026 முதல் 31-11-2026 வரையும், 28-7-2027 முதல் 13-12-2027 வரையும் சனி பகவான் வக்ரமாகிறார்.

இக்காலத்தில் உங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். பூர்வீக சொத்தில் இருந்த வில்லங்கம் நீங்கும். அச்சத்தை உண்டாக்கிய விவகாரங்கள் சுமூகமாக முடியும். முயற்சியில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். கொடுக்கல் வாங்கல் சீராகும். எல்லோரும் பாராட்டக்கூடிய நிலை உண்டாகி மகிழ்ச்சி அடைவீர்கள். பிள்ளைகள் வழியே ஏற்பட்ட சங்கடங்கள் விலகி நன்மைகள் உண்டாகும். உங்கள் மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழில் முன்னேற்றமடையும். குடும்பத்தில் நிம்மதி தோன்றும். எல்லாவற்றையும் சமாளித்து வெற்றிபெறும் நிலையை அடைவீர்கள். உங்கள் மனதிற்கு எது சரியோ அதைச் செய்வீர்கள். அதனால் ஆதாயமும் அடைவீர்கள்.

## லாப சனிக்கு குருவின் சுபத்துவம்

6-3-2026 முதல் மீன ராசிக்குள் லாப சனியாக சஞ்சரித்து உங்களுக்கு யோகமான பலன்களை வழங்கப்போகும் சனி பகவானுக்கு, அவர் சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதியான குரு பகவானின் பார்வை 26-5-2026 முதல் 20-10-2026 வரையிலும், 13-2-2027 முதல் 13-6-2027 வரையிலும், 16-11-2027 முதல் 17-4-2028 வரையிலான காலங்களில் கிடைப்பதால் நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும், நினைத்ததெல்லாம் நடந்தேறும். சொத்து, சுகம், ஆடை, ஆபரணம், பட்டம், பதவி என்று உங்கள் செல்வாக்கு உயரும்.

## பரிகாரம்

லட்சுமி நரசிம்மரை வணங்கி வழிபட வாழ்வில் உண்டான சங்கடங்கள் நீங்கும். உங்கள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ஆம் பாதங்களில் பிறந்தவர்கள். மற்றும் ஜென்ம ராசி எதுவென்று தெரியாத ஆனி மாதத்தில் பிறந்தவர்கள். கா, கி, கு, க, ங, சா, கே, கோ, ஹ ஆகியவற்றை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: புதன்.

நட்சத்திர அதிபதிகள்: செவ்வாய், ராகு, குரு.

பாதகாதிபதி: குரு.

மாரகாதிபதி: குரு, செவ்வாய்.

மிதுனத்திற்கு ஜீவன சனி

அனைத்திலும் சாதனைப் புரிந்துவரும் மிதுன ராசியினரான உங்களுக்கு இதுவரையில் உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானம் எனும் ஒன்பதாம் வீட்டில் சஞ்சரித்து வந்த சனிபகவான், உங்கள் முயற்சிகளில் எல்லாம் முன்னேற்றத்தையும் ஆதாயத்தையும் யோகத்தையும் வழங்கி வந்தார். ஒரு சிலருக்கு மட்டும் அவர்கள் ஜாதகம் மற்றும் திசா புத்தியின் காரணமாக பலன்கள் மாறுபட்டிருக்கும் என்றாலும், இக்காலத்தில் தான் உங்கள் வாழ்க்கையின் அடிப்படை வசதிகள் அனைத்தும் உங்களுக்கு கிடைத்திருக்கும். புதிய இடம் வாங்கும் முயற்சி வெற்றியாகி இருக்கும். ஒரு சிலர் புதிய வீட்டிலும் குடியேறி இருப்பீர்கள். நண்பர்களால் ஆதாயம் உண்டாகி இருக்கும். புதிய வாகனம் வாங்கி இருப்பீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடைந்திருக்கும். இருந்தாலும், ஜாதகத்தில் சனி பகவான் சஞ்சாரம் சாதகமாக இல்லாமல் போனவர்களுக்கு ஆரோக்கியத்தில் ஏதேனும் சங்கடம் தோன்றியிருக்கும். தேவையற்ற பிரச்சனைகள் உருவாகி, அலைச்சல் திரிச்சல், நிம்மதி இன்மை, தொழிலில் தடை என்றும் ஏற்பட்டிருக்கும். இவற்றையும் மீறி சில

நன்மைகள் நடந்திருக்கும் என்றால் அது பூர்வ புண்ணியத்தால் ஏற்பட்டிருக்கும். பாக்கிய ஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சாரித்த நிலையில் அவருடைய மூன்று பார்வைகளும் உங்களுக்கு சாதகமாக இருந்தது. அதனால் என்ன பிரச்சனை வந்தாலும் அதை சமாளித்திடக்கூடிய சக்தி உங்களுக்குள் இருந்தது. தைரியமாக செயல்பட்டீர்கள். எதிர்பார்த்த ஆதாயத்தை உங்களால் அடைய முடிந்தது. எதிர்ப்புகளை வெல்ல முடிந்தது. இந்த நிலைகள் எல்லாம் உங்களுக்கு இருந்தது.

உங்கள் ராசியான மிதுனத்திற்கு சனிபகவான் அஷ்டமாதிபதியும், பாக்கியாதிபதியும் ஆவார். என்றாலும், அவர் வழங்கிடும் பலன்கள் எப்போதும் அவரவரின் பூர்வ புண்ணியங்களுக்குரிய பலன்களாகவே இருக்கும்.

சனி பகவான் அசுபர் என்றாலும் நியாயவாதி, தர்மவான், ஒரு நீதிபதியைப் போன்றவர். யாராக இருந்தாலும் அவருடைய பணியில் நியாயம் தவற மாட்டார். உலகையே காக்கும் சிவனைக்கூட சனீஸ்வர பகவன் விட்டு வைத்ததில்லை என்பதால், உங்களுக்கு பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரித்தபோது யோகமான பலன்களையே சனி பகவான் வழங்கி இருப்பார். தொழிலில் இருந்த தடைகள் விலகி இருக்கும். முயற்சிகள் வெற்றியாகி இருக்கும். வருமானம் எதிர்பார்த்த அளவிற்கு வந்திருக்கும். பகைவர்களின் தொல்லை விலகியிருக்கும். அவர்களை வெற்றி கொள்ளும் நிலையும் ஏற்பட்டிருக்கும். உறவினர்களிடமும் நண்பர்களிடமும் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு விலகி இருக்கும். தந்தையின் ஆரோக்கியம் சீராகி இருக்கும். ஒரு சிலர் தந்தையின் தொழிலை மேற்கொண்டு ஆதாயம் அடைந்திருப்பீர்கள்.

இந்த நிலையில் 6-3-2026 அன்று உங்கள் ராசிக்கு பத்தாம் வீடான மீன ராசியில் உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

சனிபகவான் ஒன்பதாம் இடத்தில் சஞ்சரித்த காலத்தில் மிகப்பெரிய பாதிப்புகள் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. எல்லாமே நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தது என்று கூறும் நீங்கள், பத்தாம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் போது என்ன விதமான பலன்களை வழங்குவார் என்று கேட்பது புரிகிறது.

பொதுவாக தொழில் காரகன் சனி பகவான், தொழில் பாவமான பத்தாம் இடத்தில் சஞ்சரிப்பது காரகோ பாவ நாஸ்தியாகும்.

பத்தாம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் போது, அந்த ஜாதகருக்கு கர்மக்காரகனான, ஆயுள் காரகனான சனி பகவான் எண்ணற்ற கெடு பலன்களை வழங்குவாராம். அக்காலத்தில் ஜாதகரின் ஆரோக்கியம் கெடும். மார்பு வலி ஏற்படும். மனம் ஒரு நிலையில்

இல்லாமல் குழப்பம் காணும். தொழிலில் நஷ்டம். உத்தியோகத்தில் கஷ்டம். படிப்பில் சிரமம். குடும்பத்தில் சங்கடம் என்று அவதிப்படுத்தும். மதிப்பிற்கும் மரியாதைக்கும் கேடு உண்டாகும். பணம் தீய வழிகளில் செலவாகும்.

## இதுவும் பொதுவான விதிதான்

கிரகங்கள் ஒவ்வொருவரும் உயிர்க்காரகம், பொருள்காரகம் என்று இரண்டு விதமான பலன்களை வழங்கிடக் கூடியவர்கள்.

அதன் காரணமாக, ஏதேனும் ஒன்றில் நன்மையினை அடைபவர்கள் மற்றொன்றில் சங்கடத்தை அடைவார்கள் என்பது பொதுவான விதி.

பொதுவாக 10-ஆம் இடம் என்பது ஜீவன ஸ்தானம். அந்த இடத்தில் ஜீவன காரகனான சனி பகவான் சஞ்சரிக்கப் போகிறார். காரகன், காரக ஸ்தானத்தில் நிற்பதால் அந்த இடத்தின் பலன் பாதிக்கப்படும் என்று கூறப்பட்டாலும், 10 ம் இடம் என்பது கேந்திர ஸ்தானம் என்பதால் எல்லா தோஷங்களையும் கலைந்து யோகப் பலன்களை வழங்கிடக்கூடிய நிலையும் பத்தாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானுக்கு உண்டு.

அந்த நிலையில் சனிபகவான் 10-ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்ற இக்காலத்தில் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம், இடமாற்றம், பதவி உயர்வு என்றெல்லாம் ஏற்படும். செய்துவரும் தொழிலில் முன்னேற்றம், தொழிலில் இருந்த தடைகள் விலகி ஆதாயம். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்தல். லாபம் அதிகரித்தல் என்பதெல்லாம் உண்டாகும். அரசாங்க வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து தொழிலை விரிவுசெய்து கொள்ள முடியும். இந்த நேரத்தில் ஒரு சிலருக்கு கூடுதல் பொறுப்புகளும் வந்து சேரும். அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, தனியார் நிறுவனத்தில் வேலைச் செய்து வருபவர்களாக இருந்தாலும் சரி, அரசு பணியில் இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் இக்காலத்தில் கூடுதல் பொறுப்பு வந்து சேரும். அதன் காரணமாக வேலைபளு கூடுதலாக இருக்கும். ஒரு சிலருக்கு நிர்வாக பொறுப்புகள் கூட இந்த நேரத்தில் கிடைக்கும். கடந்த காலத்தில் தள்ளிச்சென்ற உயர்வு இந்த நேரத்தில் உங்களுக்கு கிடைக்க ஆரம்பிக்கும். எல்லா விதமான யோகமும் உண்டாகும். ஆனால், மறுபக்கம் முழுநேர உழைப்பாளியாக நீங்கள் மாற வேண்டிய நிலையும் இருக்கும்.

இந்த நேரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் உங்களுக்கு இருக்கும். அதே நேரத்தில் உடலில் உபாதைகளும் ஏற்படும். தொழில், கவுரவம், செல்வாக்கு, ஜீவனம் அனைத்திலும் முன்னேற்றம் ஏற்படும்.

இந்த நேரத்தில் சனி பகவானின் பார்வைகளை நாம் கவனிக்க வேண்டும். அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கு யோகப் பலன்களை வழங்கினாலும் அவர் பார்த்திடக்கூடிய மூன்று, ஏழு, பத்தாம் இடங்களின் நிலையினை அறிகின்ற போது நாம் அனைத்திலும் எச்சரிக்கையாக இருக்க முடியும்.

## சுக ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

தனது ஏழாம் பார்வையால் உங்கள் ராசிக்கு சுக ஸ்தானமான நான்காம் இடத்தை சனி பகவான் பார்ப்பதால், அனைத்திலும் உழைப்பு அதிகரிக்கும். என்னதான் உழைத்தாலும் அதற்குரிய பலன்கள் கிடைக்காமல் போகும். எதை எடுத்தாலும் அதில் இடையூறுகள், பிரச்சனை கள், தேவையற்ற சங்கடங்கள், அலைக்கழிப்புகள் என்று இழுபறியாகும். குடும்பத்திலும் ஒற்றுமை பாதிக்கப்படும். தாயின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும். தாய்வழி உறவுகளுடன் விரோதம், பகை என்று ஏற்படும். பூர்வீக சொத்துகளில் வில்லங்கம் ஏற்பட்டு கைக்கு வராத நிலை, வாகனத்தால் சங்கடம், வீடு வகையில் பிரச்சனை, கல்வியில் தடை, உற்றார் உறவினர் களின் பகை, மனக்குழப்பம், எதிர்பார்ப்பில் தடை, நோய்களால் சோதனை என்று நான்காம் இடத்தைப் பார்க்கும் சனி பகவானால் உங்கள் நிலை சங்கடத்திற்கு ஆளாகும்.

## சப்தம ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு ஏழாம் இடமான களத்திர, நட்பு ஸ்தானத்தை தனது பத்தாம் பார்வையால் பார்க்கும் சனி பகவானால், மனதில் சஞ்சலம் உண்டாகும். தவறான நட்பு தேடிவரும். கணவன் மனைவியரிடையே கருத்து வேறுபாடு, சண்டைச் சச்சரவுகள். அதனால், ஒரு சிலருக்கு பிரிவும்கூட ஏற்படும். ஒரு சிலர் குடும்பத்தை விட்டு விலக வேண்டிவரும். ஒரு சிலருக்கு இரண்டாம் திருமணம்கூட நடக்கும். செலவுகள் பலவழியிலும் அதிகரிக்கும் வருமானத்தில் தடைகளும் குறைவும் அதனால் பணக்கஷ்டமும் கடன் தொல்லையும் ஏற்படும். நன்றாகப் பழகி வந்த நண்பர்களுக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விலகிச் செல்வார்கள். கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் மாற்றம் அடையும். பங்குதாரர்களுடன் பிரச்சனைகள் தோன்றும். உறவினர்களில் யாராவது ஒருவர் இக்காலத்தில் மறைவர். உங்கள் உடல் நிலையிலும் பாதிப்பு ஏற்படும்.

## விரய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

உங்கள் ராசிக்கு பனிரெண்டாம் இடமான விரயம் மற்றும் அயன சயன ஸ்தானத்தை தனது மூன்றாம் பார்வையால் பார்க்கும் சனி பகவானால், வீண் அலைச்சல் அதிகரிக்கும். பிறரை நம்பி முதலீடு செய்து நஷ்டமடைய வேண்டிவரும். எளிதாக முடியவேண்டிய வேலைகளும் இக்காலத்தில் கைகூடாமல் போகும், வேலையிலும் தொழிலிலும் சட்ட சிக்கல்களை சந்திக்க வேண்டிவரும். மன உளைச்சல், பொருள் இழப்பு, எதிரிகளால் இடையூறு, தொழிலில் நஷ்டம்,

உத்தியோகத்தில் சங்கடம், வேலையை இழக்க வேண்டிய சூழல், தவறான நண்பர்களின் சினேகிதம், தவறான பழக்க வழக்கங்கள், வாகன விபத்து என்று சந்திக்க வேண்டிவரும்.

## அதிர்ஷ்டம் தரும் அஸ்தமன காலம்

பத்தாம் இடமான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து, 4, 7, 12-ஆம் இடங்களைப் பார்த்து உங்கள் வாழ்வில், தொழிலில், உத்தியோகத்தில் சங்கடங்களை வழங்கப்போகும் சனி பகவான், 12-3-2026 முதல் 11-4-2026 வரையிலும், 25-3-2027 முதல் 24-4-2027 வரையிலும் அஸ்த மனம் அடைவதால் இக்காலம் உங்களுக்கு யோக காலமாக இருக்கும், சனிபகவானால் ஏற்படும் சங்கடங்கள் உங்களை நெருங்காமல் போகும்.

## வளம்தரும் வக்ர சனி

சனி பகவானின் சஞ்சார நிலைகள் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. ஒரு ராசிக்குள் அவர் சஞ்சரிக்கின்ற போது அந்த ராசிக்குள்ளாக ஒரு ஆண்டிற்கு நான்கு மாதங்கள் வக்ர கதியினை அடைவார். அந்த நேரங்களில் அதுவரை அவர் வழங்கி வந்த பலன்களில் மாற்றம் ஏற்படும். அக்காலத்தில் ஜாதகருக்கு வழங்கி வந்த பலன்கள் யோகப் பலன்களாக இருந்தாலும், எதிர்மறையான பலன்களாக இருந்தாலும் அப்பலன்களில் மாற்றம் ஏற்படும்.

அந்த நிலையில் 15-7-2026 முதல் 31-11-2026 வரையும், 28-7-2027 முதல் 13-12-2027 வரையும் சனிபகவான் மீன ராசியில் வக்கிரம் ஆகிறார். இந்த வக்கிர காலத்தில் உங்களுக்கு மேலே கூறிய சங்கடமான பலன்கள் உங்களை நெருங்காமல் போகும். தொழில் முன்னேற்ற மடையும், உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் முடிவிற்குவரும். எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கும், அரசியல்வாதிகள் செல்வாக்கு உயரும், தம்பதிகளுக்குள் இணக்கமான நிலை உண்டாகும், ஆரோக்கியம் சீராகும், புதிய சொத்து சேரும், விருப்பமான வாகனம் வாங்க முடியும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும், விரயச்செலவுகள் கட்டுப்படும், விருப்பங்கள் பூர்த்தியாகும். மற்ற கிரகங்களின் நிலையின் காரணமாக, தசா புத்திகளின் காரணமாகவும் யோகப் பலன்களை உங்களால் காண முடியும். பிரச்சனைகள், நெருக்கடிகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகும்.

## பரிகாரம்

உங்கள் சுய ஜாதகத்தைப் பார்த்து அதில் உள்ள கிரக நிலைக்கேற்ப கிரகங்களுக்கு பரிகாரம் செய்து கொள்வது அவசியம். ஒரு முறை திருநள்ளாறு சென்று நளத் தீர்த்தத்தில் நீராடி தர்பாரண்யேஸ்வரரை வணங்கி, சனீஸ்வரனுக்கு நல்லெண்ணெய் தானம் செய்து வழிபட்டு வர சங்கடங்கள் விலகும். நன்மைகள் அதிகரிக்கும்.



# கடகம்

**புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும்; ராசி எதுவென்று தெரியாத ஆடி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; ஹி, ஹீ, ஹே, ஹோ, டி, டு, டே, டோ ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: சந்திரன்.

நட்சத்திர அதிபதிகள்: குரு, சனி, புதன்.

பாதகாதிபதி: சுக்கிரன்.

மாரகாதிபதிகள்: சூரியன், சனி.

கடகத்திற்கு பாக்ய சனி.

நினைத்ததை சாதிப்பதில் உறுதியாக இருக்கும் கடக ராசியினரான உங்களுக்கு, இதுவரையில் உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் அஷ்டம சனியாக சஞ்சரித்து வந்த சனி பகவான் 6-3-2026 முதல் மீன ராசிக்குள் உங்களுக்கு பாக்ய சனியாக சஞ்சரிக்கப் போகிறார். சனி பகவான் சஞ்சாரத்தில் ஆரோகணம் அவரோகணம் என்ற இரண்டு நிலை உள்ளது. கடக ராசிக்காரரான உங்கள் ஜாதகத்தில் மேஷத்தில் இருந்து துலா ராசிக்குள் சனி பகவான் அமர்ந்திருந்தால் பலம் மிக்கவராக, சுபத் தன்மையுடன் பலன் அளிப்பவராகவும், மேன்மையான யோகப் பலன்களை வழங்கிடக் கூடியவராகவும் இருப்பார். இதற்கு ஆரோகணம் என்று பெயர். துலாம் ராசியில் இருந்து மேஷம் ராசிக்குள் சனி பகவான் அமர்ந்திருந்தால் பலம் குறைந்தவராகிறார். ஜாதகருக்கு நற்பலன்களை குறைத்தே வழங்கிடக் கூடியவராகிறார். இதற்கு அவரோகணம் என்று பெயர்.

கிரகங்கள் அமருகின்ற இடத்திற்கு ஏற்ப பலன்கள் மாறுபடும் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாகும்.

கிரகங்களில் அசுப கிரகம் என்று பெயர் எடுத்த சனிபகவான் தான் பார்க்கும் இடத்தை விட தான் இருக்கும் ஸ்தானத்தின் பலனையே ஜாதகருக்கு வழங்குவார் என்று கூறப் பட்டாலும் இதிலும் விதிவிலக்குகள் உண்டு.

உங்கள் ராசிக்கு ஏழுக்கும், எட்டாம் இடத்திற்கும் அதிபதியான சனி பகவான் இதுவரையில் உங்கள் ராசிக்கு ஆயுள் ஸ்தானம், அஷ்டம ஸ்தானம் எனும் எட்டாம் வீட்டில் இருந்து உங்களுக்கு பல்வேறு இடர்பாடுகளை உண்டாக்கி வந்தார். ஒரு சிலர் மரணத்தின் எல்லையைக் கூட தொட்டு விட்டு வந்திருக்கலாம். மருத்துவ மனையே வாழ்க்கையாக மாறி இருக்கலாம். தவறான நண்பர்களின் சகவாசம் ஏற்பட்டு உங்கள் வாழ்க்கையும் மாற்றம் பெற்றிருக்கலாம். செல்வாக்கு அந்தஸ்து என்ற நிலைகளில் இருந்து கீழிறங்க வேண்டிய நிலையும் ஒரு சிலருக்கு ஏற்பட்டிருக்கும். குடும்பத்திலும் கஷ்டம். தொழிலில் போட்டி. தம்பதியரிடையே கருத்து வேறுபாடு. உறவினர்களிடம் மனக்கசப்பு. முயற்சிகளில் தடை. உடலில் பாதிப்பு. ஊரு விட்டு ஊரு செல்லும் நிலை. சிறு சிறு விபத்துகள். அவமானங்கள். எதற்காக வாழ்கிறோம் என்று உங்களை நீங்களே கேள்வி கேட்டுக்கொள்ளும் அளவிற்கு சங்கடங்கள் என்ற நிலைமையை ஏற்படுத்தி வந்தார்.

கடந்த இரண்டரை வருடத்தில் உங்களுக்கு நன்மைகளை விட தீமைகளே அதிகமாக ஏற்ப ட்டது என்றாலும், அவற்றையெல்லாம் உங்கள் பூர்வ புண்ணிய பலத்தால் சமாளித்து வந்தீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு 9 ம் இடமான பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் சனி பகவான் உங்களுக்கு எத்தகைய பலன்களை வழங்கப் போகிறார் என்றுதானே கேட்கிறீர்கள்?

உங்கள் ராசியான கடகத்திற்கு சனி பகவான் சப்தமாதிபதியும் அஷ்டமாதிபதியும் என்பதுடன் உங்களுக்குப் பகையானவருமாவார்.

பகையானவர், அஷ்டமாதிபதி என்பதால் அவர் பாதகமான பலன்களை வழங்கிடுவாரா என்றக் கேள்வியும் உங்களுக்கிருக்கும்.

பொதுவாக கிரகங்கள் ஒரு ஜாதகத்தில் எந்த நிலையில் சஞ்சரித்தாலும் சரி, கோச்சார ரீதியாக ஒரு ராசிக்குள் சஞ்சரிக்கும்போது அந்த இடத்திற்குரிய பலன்களை அவரவரின் பூர்வ புண்ணியங்களுக்கேற்ப வழங்குவார்கள்.

சனிபகவான் அசுபர் என்றாலும் நியாயவாதி. தர்மவான். ஒரு நீதிபதியைப் போன்றவர். யாராக இருந்தாலும் அவருடைய பணியில் நியாயம் தவறமாட்டார். உலகையே காக்கும்

சிவனைக்கூட சனீஸ்வர பகவான் விட்டு வைத்ததில்லை.

சனிபகவான் ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் தொழிலில் இருந்த தடைகள் அகலும். முயற்சிகளில் ஏற்பட்ட தோல்விகள் விலகும். வருமானம் தடைபட்டிருந்த நிலை மாறும். பகைவர்களின் தொல்லைகள் அகலும். அவர்களை வெற்றிகொள்ளும் நிலை உண்டாகும். உறவினர்களிடமும் நண்பர்களிடமும் உண்டாகி இருந்த மனக்கசப்பு அகலும். புதிய சொத்து சேரும் தந்தையின் ஆரோக்கியம் சீராகும். ஒரு சிலர் தந்தையின் தொழிலை மேற்கொண்டு ஆதாயம் அடைவீர்கள்.

பொதுவாகவே பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்ற சனி பகவான் யோகமான பலன்களை வழங்கிடக் கூடியவர் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். 12 ராசிகளில் அவர் சஞ்சரிக்கும் காலங்களில் 9 ம் இடத்தில் அவர் சஞ்சரிக்கும் போதுதான் மிகவும் யோகமான பலன்களை ஜாதகருக்கு வழங்கி அவருடைய வாழ்க்கையில் புதிய பாதையைக் காட்டுவார். நிலைத்த செல்வாக்கையும். நீள் புகழையும் ஜாதகருக்கு வழங்குவார். சஞ்சார நிலையினால் மட்டும் அல்லாமல் இக்காலத்தில் மட்டும்தான் அவருடைய 3,7,10 ம் பார்வைகளும் 3,6,11 ம் இடங்களைப்பார்த்து நான்கு பக்கமும் யோகப்பலன்களை வழங்கிட இருக்கிறது. இதன் காரணமாகத்தான் முப்பது வருடங்கள் யாரும் வாழ்ந்தவருமில்லை முப்பது வருடங்கள் யாரும் கெட்டவருமில்லை என்று கூறப்படுகிறது. அதனால், இதுவரை உங்களுக்கிருந்த நெருக்கடிகள் இனி இல்லாமல் போகும். தடைபட்டிருந்த கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். உயர்கல்வி வெற்றியாகும். வெளிநாட்டு வியாபார தொடர்புகள் கிடைக்கும்.

கர்மக் காரகனான, ஜீவனாதிபதியான சனி பகவான் சுய ஜாதகத்தில் கெட்டிருந்தால் இப்பலன்களில் மாற்றம் உண்டாகும். பணப்பிரச்சினை. வருமானத்தில் தடை. அரசு வழியில் பிரச்சனைகள் வரும். இருந்தாலும், கடந்த காலம்போல் இல்லாமல் பாக்ய சனி உங்களுக்கு பாக்யத்தையே ஏற்படுத்துவார்.

குரு பகவான் அவர் இருக்கும் இடத்திற்குப் பலன் தராமல் பார்க்கும் இடங்களுக்குப் பலன் தருவார். சனி பகவான் இருக்கும் இடத்திற்கு சிறப்பான பலனை அளித்து பார்க்கும் இடங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்துவார் என்பது பொது விதி. இந்த விதியில் மூன்று, ஆறு, பதினொன்றாம் இடங்களில் அவருடைய பார்வை படும்போது நன்மைகளே உண்டாகும் என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

சுய ஜாதகம் பலம் பெற்றவர்களுக்கும், நட்பான திசா புத்தி நடப்பவர்களுக்கும் சனி பகவான் வழங்கும் நன்மைகள் அதிகரிக்கும். கெடு பலன்கள் குறையும் என்பதுடன் 12 ராசிகளில் உலவும் மற்ற கிரகங்களின் பார்வைகளாலும் சேர்க்கைகளாலும் பலன்கள் மாறும்.

உங்கள் ராசிக்கு 9 ம் இடமான பாக்ய ஸ்தானத்தில் அமர்ந்து உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான சகாய ஸ்தானத்தையும், ஆறாம் இடமான சத்ரு ஜெய ஸ்தானத்தையும், பதினொன்றாம் இடமான லாப ஸ்தானத்தையும் பார்க்கப் போகிறார் சனி பகவான்.

## லாப ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

தன்னுடைய மூன்றாம் பார்வையால் உங்கள் லாப ஸ்தானமான பதினொன்றாம் இடத்தை சனி பகவான் பார்ப்பதால் இதுவரை உங்களுக்கிருந்த பிரச்சனைகள் முடிவிற்குவரும். வருமானத்தில் இருந்த தடைகள் விலக ஆரம்பிக்கும். செய்து வரும் தொழிலில் ஆதாயம்கூடும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். முடங்கிக்கிடந்த தொழில் மீண்டும் இயங்கிட ஆரம்பிக்கும். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். வேலைக்காக முயற்சித்து வருபவர்களுக்கு வேலைக் கிடைக்கும். தொழிலில் மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவை நிகழ்ந்தாலும் அவற்றின் மூலம் உங்களுக்கு நன்மையே உண்டாகும். பணவரவு பல வழிகளிலும் வந்துகொண்டே இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத் துணையை இழந்த சிலருக்கு மறுமணம் நடந்தேறும். வராமல் இருந்த பணம் வரும். புதிய நட்பு ஏற்பட்டு அந்த நட்பால் மகிழ்ச்சி அதிகரிக்கும். விஐபிகளும் உங்களுக்கு உதவி புரிவர். செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து எல்லாம் உயரும்.

## சகாய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் ஏழாம் பார்வை உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான சகோதர, தைரிய, வீரிய, சகாய ஸ்தானத்திற்கு உண்டாவதால் உங்கள் ஆரோக்கியம் சீரடையும். தொழிலில் விருத்தி உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் வசதியும் அதிகரிக்கும். உங்கள் பலம் கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் ஏற்படும். விரோதிகளை வென்று அடக்கிடும் அளவிற்கு உங்கள் நிலையில் மாற்றம் உண்டாகும். எதிர்பாராத பணவரவு ஏற்படும். பல்வேறு நன்மைகள் உண்டாகும். விலகி இருந்த சகோதர சகோதரிகளும் இனி உங்களுக்கு உதவியாக இருப்பார்கள், அவர்களுடன் ஏற்பட்ட பிரச்சனைகள் விலகும்.

## சத்ரு ஜெய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் பத்தாம் பார்வை உங்கள் ராசிக்கு ஆறாம் இடமான ருண ரோக சத்ரு ஜெய ஸ்தானத்திற்கு உண்டாவதால், மனதில் துணிச்சல் அதிகரிக்கும். வாழ்க்கையில் புத்துணர்ச்சி உண்டாகும். உடலில் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும். தொழில் விருத்தியாகும். எதிரிகளை இருக்கும் இடம் தெரியாமல் செய்யும் ஆற்றல் ஏற்படும். எதிர்பாராத பணவரவும் குடும்பத்தில் நிம்மதியும் உண்டாகும். இழுபறியாக இருந்த பிரச்சனைகள் முடிவிற்கு வரும், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று பயந்து கொண்டிருந்த வழக்குகள் சாதகமாகும்.

உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்களும் உங்களிடம் வந்து சமாதானம் பேசக்கூடிய அளவிற்கு உங்கள் நிலையில் மாற்றம் ஏற்படும். முன்னேற்றம் உண்டாகும்.

## அதிர்ஷ்டம் தருவாரா அஸ்தமன சனி

பாக்ய சனிக்காலம் உங்களுக்கு யோக காலமாகவே இருக்கும் நிலையில், அவருடைய பார்வைகளாலும் உங்களுக்குப் யோகப் பலன்கள் உண்டாகி வரும் நிலையில், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் உங்களுக்கு கிடைத்து வந்த பலன்களில் மாற்றம் ஏற்படும். மந்தநிலை உண்டாகும்.

## வளம் தருவாரா வக்கிர சனி?

சனி பகவானின் சஞ்சார நிலைகள் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை ஒரு வீட்டில் இரண்டரை ஆண்டுகள் சஞ்சரித்தாலும் அந்த இரண்டரை ஆண்டுகளும் தொடர்ந்து ஒரே நட்சத்திரத்தில் ஒரே நிலையில் இருப்பதில்லை, இருக்கும் இடத்தில் அஸ்தமனம் அடைவார். வக்கிரம் அடைவார் என்பதால் இக்காலங்களில் அவர் வழங்கி வந்த பலன்களிலும் மாற்றம் ஏற்படும்.

அந்த வகையில் 15.7.2026 முதல் 31.11.2026 வரையும், 28.7.2027 முதல் 13.12.2027 வரை சனி பகவான் மீன ராசிக்குள் வக்கிர கதிக்கு ஆளாவதால் மேலே சொன்ன பலன்களில் மாற்றம் இருக்கும் என்றாலும், குரு, ராகு, கேது, செவ்வாய், சூரியன் சஞ்சாரங்கள் இக்காலத்தில் சாதகமாக இருந்தால் உங்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும்.

## பாக்ய சனிக்கு குருவின் சுபத்துவம்

6.3.2026 முதல் மீன ராசிக்குள் பாக்ய சனியாக சஞ்சரித்து உங்களுக்கு யோகப்பலன்களை சனி பகவான் வழங்கப்போகும் நிலையில், அவர் சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதியான குரு பகவானின் பார்வை 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலான காலங்களில் கிடைப்பதால் நீங்கள் நினைப்பதெல்லாம் நடந்தேறும். எடுத்த வேலைகள் யாவும் வெற்றியாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். பொன் பொருள் சேரும். பட்டம் பதவி கிடைக்கும். உங்கள் வாழ்க்கை வளமாகும்.

## பரிகாரம்

ஒருமுறை திங்களூர் சென்று கைலாச நாதரையும், சந்திர பகவானையும் வணங்கி வழிபட்டுவர மனம் தெளிவடையும். நன்மைகள் நடந்தேறும்.



# சிம்மம்

**மகம், பூரம், மற்றும் உத்திரம் 1 ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கும்; ராசி எதுவென்று தெரியாத ஆவணி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; ம, மி, மு, மே, மோ, ட, டி, டு, டே ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: சூரியன்.

நட்சத்திர அதிபதிகள்: கேது, சுக்கிரன், சூரியன்.

பாதகாதிபதி: செவ்வாய்

மாரகாதிபதிகள்: சுக்கிரன், குரு

## சிம்மத்திற்கு அஷ்டம சனி

எந்த நிலை வந்தாலும் அதை எதிர்கொள்ளக்கூடிய சக்திபடைத்த உங்களுக்கு, கடந்த இரண்டரை ஆண்டு காலமாக போராட்டமாகவே இருந்திருக்கும். அதற்கு காரணம் உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானமான ஏழாம் இடத்தில் உங்கள் சப்தம ஸ்தானாதிபதியான சனி பகவான் சஞ்சரித்து ஏழாம் பார்வையால் உங்கள் ராசியையும் பார்த்து வந்ததுதான்.

சனிபகவான் உங்கள் ராசிநாதனுக்கு பகையானவர் என்பதுடன் உங்கள் ராசிக்கு சத்ரு ஸ்தானாதிபதியும் அவர்தான். களத்திர ஸ்தானாதிபதியும் அவர்தான். இதன் காரணமாகத்தான் நீங்கள் என்னதான் செல்வாக்கோடு வாழ்ந்து வந்தாலும் எப்பொழுதுமே உங்களுக்கு ஒருபக்கம் எதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும். திருமண வாழ்க்கையிலும் நிம்மதி என்பது இல்லாமல் இருக்கும்.

இந்த நிலையில், களத்திர ஸ்தானமான ஏழாம் வீட்டில் இருந்த சனி பகவான், குடும்பத்தில் நிம்மதியற்ற நிலையையும், பல்வேறு பிரச்சனைகளையும் உண்டாக்கி இருப்பார். அந்நியப்பெண்களால் அலைச்சலுடன் அவப்பெயருக்கும் ஆளாகி

இருப்பீர்கள். நண்பர்களிடம் கருத்து வேறுபாடும் பிரிவும் ஏற்பட்டிருக்கும். ஒரு சிலருக்கு அலைச்சல் அதிகரிப்பு, பணவிரயம், வெளியூர்வாசம் என்று வாழ்க்கையே போராட்டமாகி இருக்கும். புத்திரர்களின் நிலையை எண்ணி வருத்தம், வேதனை உண்டாகி இருக்கும். கடன் தொல்லையால் அதிகபட்சமான நெருக்கடி என்று நிறையவே பாதகமான பலன்கள் ஏற்பட்டிருக்கும்.

கடந்த இரண்டரை வருடங்களில் உங்கள் வாழ்க்கையில் புயல்வீசி இருக்கும். திசைமாறி சென்ற படகு திரும்பவும் கரைசேருமா என்ற நிலையில் தத்தளித்து இருப்பீர்கள். வாழ்க்கையே பெரும் போராட்டமாக இருந்திருக்கும். திசா புத்தி நன்றாக இருந்தவர்கள் மட்டும் ஓரளவிற்கு சிக்கலான நிலையின்றி நன்றாக இருந்திருப்பீர்கள். என்றாலும், ஏதேனும் ஒரு சங்கடம் உங்கள் வாழ்க்கையில் இருந்திருக்கும். குடும்பத்தில் நெருக்கடி ஏற்பட்டிருக்கும்.

இந்த நிலையில் 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு எட்டாம் வீடான ஆயுள் ஸ்தானத்தில் பிரவேசம் செய்கிறார் சனிபகவான். உங்களுக்கு எட்டாம் வீட்டிற்குரிய அதிபதி குரு பகவான்தான் உங்கள் ராசிக்கு மாரகாதிபதியாவார்.

கிரகங்களில் அசுப கிரகம் என்ற பெயர் பெற்றவரான சனி பகவான், தான் பார்க்கும் இடத்தின் பலன்களை பாதகமாகவும், இருக்கும் ஸ்தானத்தின் பலனை சாதகமாகவும் வழங்குவார் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

ஆனால், அஷ்டம ஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம் என்பது ஆயுளுக்கு பாதகமான காலமாக இருக்குமா? என்ற கேள்வியும் உங்களிடம் இருக்கும்.

ஆயுள் காரகனான சனி பகவான் மாரகாதிபதியின் வீட்டில் சஞ்சரிக்கும் காலம் என்பதால் உங்களுக்குள் அச்சம் இருக்கும். ஆனால், பூர்வ புண்ணிய பலன்களை உங்களுக்கு வழங்க வேண்டிய சனி பகவான், உங்களை உயிருடன் வைத்திருக்க வேண்டியவராகவும் இருக்கிறார். அதனால் உங்கள் ஆயுளுக்கு எந்த விதமான நெருக்கடியும் இக்காலத்தில் ஏற்படாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக ஏழரை ஆண்டு சனிக்காலத்தில் எத்தகைய பலன்களை வழங்குவாரோ அதே பலன்களைத்தான் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டுகள் காலத்தில் சனி வழங்குவார் என்கிறது ஜோதிட விதி. ஏழரை ஆண்டுகள் அனுபவிக்கும் சங்கடங்களை இரண்டரை ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக அனுபவிக்க வேண்டியதாக இருக்கும். மற்ற இடங்களில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலங்களில்கூட ஒருசில பார்வைகளால் பலன் கிடைக்கும். ஆனால், அஷ்டம சனி காலத்தில் அவருடைய மூன்று பார்வைகளும் பாதகமான பலன்களையே தரும்.

ஜனன ராசிக்கு எட்டாம் ராசியில் சனி பகவான் அஷ்டம சனியாக சஞ்சரிக்கக்கூடிய காலத்தில்,

ஜாதகருக்கு பலவிதமான சோதனைகளும் இடர்பாடுகளும் நிகழும்.

எட்டாம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலத்தில் பல்வேறு இடர்பாடுகள் தோன்றும். குடும்பத்தில் கஷ்டத்துடன் எல்லையற்ற பிரச்சனைகள் உண்டாகும். கணவன் மனைவியரிடையே கருத்து வேறுபாடும் பிரிவும் ஏற்படும். மனக்கசப்பும் முயற்சிகளில் தடையும், ஊர்விட்டு ஊர் செல்லும் நிலையும். அந்நியர்களுடன் நட்பும், வாழ்க்கைத்துணையின் உடல்நிலையில் பாதிப்பும் உண்டாகும் என்பது விதி. பெண்களுக்கு எட்டாம் இடம் என்பது மாங்கல்ய ஸ்தானம் என்பதால் கணவரின் உடல்நிலையில் இக்காலத்தில் பாதிப்புகள் ஏற்படும். அதே நேரத்தில் உங்கள் திறமைக் கேற்ற வாய்ப்புகள் வரும். உங்களை நம்பி ஒரு சில பொறுப்புகளையும் சிலர் ஒப்படைப்பார்கள்.

சுய ஜாதகம் பலம் பெற்றவர்களுக்கும், நட்பான தசா புத்தி நடப்பவர்களுக்கும் இப்பலன்கள் மாறுபடும் என்பதுடன் பனிரெண்டு ராசிகளில் உலவும் மற்ற கிரகங்களின் சஞ்சாரங்களாலும், பார்வைகளாலும், சேர்க்கைகளாலும் இக்காலத்தில் இதற்கு மாறான பலன்களும் நன்மைகளும் நிகழக்கூடும். எனவே எட்டில் சனி சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டு காலமும் ஒரே மாதிரியான பலன்தான் உண்டாகும் என்று பயந்து விடாதீர்கள்.

உங்கள் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் அங்கிருந்து உங்கள் தன குடும்ப வாக்கு ஸ்தானத்தையும், பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும் பார்வையிடுகிறார். பொதுவாக சனி பகவான் அவர் பார்க்கும் இடங்களை எல்லாம் பாழ்படுத்துவார் என்கிறது ஜோதிட சாஸ்திரம். அதன் காரணமாகத்தான் சனி பகவானை தரிசிக்கும் போதுகூட அவருக்கு நேராக நின்று தரிசிக்கக் கூடாது என்பார்கள்.

## ஜீவன ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனிபகவானின் மூன்றாம் பார்வை 6.3.2026 முதல் உங்கள் தொழில் ஸ்தானமான பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், செய்துவரும் வியாபாரம், தொழில் மந்தமாகும். முன்னேற்றத் தில் முட்டுக்கட்டை விழும். உடலில் உபாதை உண்டாகும். பணிபுரியும் இடத்தில் நெருக்கடி அதிகரிக்கும். வேலையில் பிரச்சனைகள் தோன்றும். உங்கள் செல்வாக்கு, கௌரவம் போன்ற வற்றில் பங்கம் உண்டாகும். ஜீவன வகையில் கஷ்டம் வரும். அரசியலில் சரிவு ஏற்படும். உடன் இருந்தவர்கள் ஒவ்வொருவராக விலகிச் செல்வார்கள். அரசாங்கத்தால் கிடைத்து வந்த நன்மைகளில் பாதிப்பு உண்டாகும். வேலைப்பார்க்கும் இடத்தில் உடன் இருப்பவர்களுடன் இணக்கமற்ற நிலை ஏற்படும். பணியாளர்கள் ஒத்துழைப்பால் நன்றாக இயங்கி வந்த வியாபாரம் தொழில்களும் இக்காலத்தில் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமலும், அவர்கள் இல்லாமலும் பின்னடைவை சந்திக்கும். ஒவ்வொரு நாளும் போராட்டமாகவே இருக்கும். முழங்காலில் வலி தோன்றும்.

## தன, குடும்ப ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் ஏழாம் பார்வை உங்கள் தன குடும்ப வாக்கு ஸ்தானமான இரண்டாம் இடத்திற்கு ஏற்படுவதால், நன்றாக வந்து கொண்டிருந்த வருமானத்தில் தடை ஏற்படும். குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை உண்டாகும். வார்த்தைகளால் சங்கடத்திற்கு ஆளாக வேண்டிவரும். துன்பத்திற்குமேல் துன்பம் தோன்றும். தொட்டதெல்லாம் தோல்வியில் முடியும். ஒரு சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் நேரும். பொருட்கள் களவு போகும். வியாபாரத்தில் போட்ட முதலீடுகள் எல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம்போல் போட்ட இடம்தெரியாமல் போகும். பொருளாதார இழப்பு உண்டாகும். சந்தோஷமும் நிம்மதியும் காணாமல் போகும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் தத்தளிக்கும். வரவைவிட செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் உண்டாகும். வலது கண் பார்வையில் குறை உண்டாகும்.

## பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் பத்தாம் பார்வை உங்கள் பூர்வ புண்ணிய, புத்திர ஸ்தானமான ஐந்தாம் இடத்திற்கு உண்டாவதால் இக்காலத்தில் அனைத்திலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சனி பகவான் கர்மக்காரகன் என்பதால் நம்முடைய பூர்வ புண்ணிய நிலையறிந்து பலன் கொடுத்திடக் கூடியவர். பூர்வ புண்ணிய ஸ்தானத்தை அவரே பார்க்கும் இக்காலத்தில், புத்திரர் புத்திரிகளால் உங்கள் மனம் பாதிக்கும். அவர்களுடைய செயல்களால் வேதனை உண்டாகும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் தீய எண்ணங்களால் அலை மோதும். பூர்வீக சொத்துகளில் பிரச்சனைகள் தோன்றும். எந்த வயதினராக இருந்தாலும் எதிர்பாலினரின் பாச, மோச வலைகளில் விழக்கூடிய நிலை உண்டாகும். காதலில் சிக்கி செய்துவரும் தொழிலைக் கவனிக்க முடியாமல் போகும். வம்பு வழக்கு என்று ஏற்படும். குடும்பத்தில் கலகமும், சண்டை சச்சரவும் நிறைந்திருக்கும். உங்களுக்கு வேதனைதரும் நிகழ்ச்சிகள் நடக்கும். அதனால் அதிர்ச்சி அடைவீர்கள். கணவன் மனைவிக்குள்ளும் பிரச்சனைகள் அதிகரிக்கும். புத்திர பாக்கியத்தை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அந்த பாக்கியம் தள்ளிப்போகும்.

## அதிர்ஷ்டம் தரும் அஸ்தமன காலம்

அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் நிலையில், உங்கள் வாழ்க்கையில் நெருக்கடி களையும் போராட்டங்களையும் சனி பகவான் உண்டாக்க முயற்சித்தாலும், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் அவர் அஸ்தமனம் அடைவதால் அஷ்டம சனியால் ஏற்பட்ட சங்கடங்கள் இக்காலத்தில் உங்களை நெருங்காமல் போகும்.

## வளம்தரும் வக்கிர சனி!

அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், 15.7.2026 முதல் 31.11.2026 வரையும், அதன் பிறகு 28.7.2027 முதல் 13.12 .2027 வரையும் வக்கிர கதியில் சஞ்சரிப்பார்.

இக்காலம் என்பது கடும் மழையில் நனைந்த உங்களுக்கு பாதுகாப்பிற்கு ஒரு குடை கிடைத்ததுபோல் இருக்கும். உங்களை நெருக்கடிக்கு ஆளாக்கி வந்த பிரச்சனைகள் தள்ளிப்போகும். சங்கடங்கள் குறையும். மனதில் இருந்த பதட்ட நிலையும் பயமும் நீங்கும். உடல் நிலையில் உண்டான பாதிப்புகள் குறையும். தந்தை வழியில் ஆதாயம் அதிகரிக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் வந்து சேரும். தொழிலில் தோன்றிய பாதிப்பு விலகும். குடும்பத்தில் நிம்மதியான சூழல் ஏற்படும். அலைச்சல் குறைந்து எடுத்த வேலைகள் நல்லபடியாக முடியும். உங்கள் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெற்று எதிர்காலம் பற்றி திட்டமிடுவீர்கள். பிள்ளைகளால் நன்மை அதிகரிக்கும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் விலகும். வருமானம் அதிகரிக்கும்.

## அஷ்டம சனிக்கு குருவின் பார்வை

6.3.2026 முதல் மீன ராசிக்குள் அஷ்டம சனியாக சஞ்சரித்து சோதனைகளையும் வேதனைகளையும் சனி பகவான் உண்டாக்குவார். உலகைப் புரிந்துகொள்ள வைப்பார். உடல்நிலை, மனநிலை, தொழில், உத்தியோகம், குடும்பத்தில் நிம்மதி இல்லா நிலையினை ஏற்படுத்துவார் என்றாலும், அவர் சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதியான குரு பகவான், 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலான காலங்களில் சனி பகவானைப் பார்ப்பதால் அஷ்டம சனியின் பாதிப்புகள் உங்களை நெருங்காமல் போகும். எடுக்கும் வேலைகள் வெற்றியாகும். உடல்நிலை சீராகும். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும், கௌரவம், அந்தஸ்து உயரும். புதிய சொத்து சேரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கும்.

## பரிகாரம்

திருக்கொள்ளிக்காட்டிற்கு ஒருமுறை சென்று ஸ்ரீ அக்னீஸ்வரரை வணங்கி வழிபட்டு அர்ச்சனை செய்து வருவதுடன், சனீஸ்வரனுக்கு நல்லெண்ணை தானம் வழங்கி வருவதும், சனிக்கிழமைகளில் இயலாதவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் உங்களால் முடிந்த உதவிகளைச் செய்துவர அஷ்டம சனியால் உங்களுக்கு வரும் சங்கடங்கள் போகும்.



# கன்னி

**உத்திரம் 2, 3, 4 ம் பாதங்கள், மற்றும் அஸ்தம், சித்திரை 1, 2 ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும்; ராசி எதுவென்று தெரியாத புரட்டாசி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; டோ, ப, பி, பு, ஷ, ண, ட, பே, போ ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: புதன்.

நட்சத்திர அதிபதிகள்: சூரியன், சந்திரன், செவ்வாய்.

பாதகாதிபதி: குரு.

மாரகாதிபதிகள்: குரு, சந்திரன்

## கன்னிக்கு கண்டக சனி

நினைத்ததை நினைத்தபடி நடத்தி முடிப்பதில் வல்லவரான உங்களுக்கு, நடைபெற்றுவரும் காலத்தை யோக காலம் என்றே சொல்ல வேண்டும்.

கிரகங்களில் அசுப கிரகம் என்று அழைக்கப்படும் சனி பகவான், உங்கள் ராசிநாதனுக்கு நட்பானவர். அதே நேரத்தில் உங்கள் பஞ்சம ஸ்தானத்திற்கும், சத்ரு ஸ்தானத்திற்கும் அவரே அதிபதியாகிறார்.

சனி பகவான் கோச்சார ரீதியாக மூன்று, ஆறு, பதினொன்றாம் இடங்களில் சஞ்சரிக்கும் காலங்களில் ஜாதகருக்கு அபரிமிதமான பலன்களை வழங்குவார் என்பது பொதுவிதி. அதேபோல் அவர் 3, 6, 11 ம் வீடுகளைப் பார்க்கும்போது அந்த வீடுகளுக்கும் நன்மையான பலன்களையே வழங்குவார்.

இதுவரை உங்கள் ராசிக்கு சத்ரு ஸ்தானம் எனும் ஆறாம் வீட்டில் சஞ்சரித்துவந்த சனி பகவான் உங்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்கி வந்தார். எடுத்த காரியங்களில் வெற்றிகளையும், அபார ஆற்றலையும், எதிரிகளை எதிர்த்து நிற்கக்கூடிய வலிமையையும் உங்களுக்கு வழங்கி வந்தார். நீங்கள்

முயற்சி செய்த வேலைகள் எல்லாம் உங்களுக்கு லாபத்தை வழங்கியது. உங்கள் உடலில் இருந்த சங்கடங்கள் எல்லாம் விலகிப்போனது. வழக்குகள் உங்களுக்கு சாதகமானது. அதனால் கடந்த காலம் என்பது உங்களுக்கு ஒரு பொற்காலம், யோகமான காலம் என்றே சொல்ல வேண்டும்.

கடந்த இரண்டரை வருடத்திலும் சனிபகவான் உங்களுக்கு பல வழிகளிலும் நன்மைகளையே வழங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில் 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு ஏழாம் வீடான மீன ராசிக்குள் கண்டக சனியாக சஞ்சாரம் செய்கிறார் சனிபகவான். உங்கள் ராசி நாதனுக்கு சனி பகவான் நட்பானவர் என்றாலும், அவர் எங்கு சஞ்சரிக்கிறாரோ அந்த இடத்திற்குரிய பலன்களை ஜாதகருக்கு நியாயமாகவும் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் வழங்கிடக்கூடியவர். அதன் காரணமாகத்தான் சனி பகவானுக்கு நீதிமான் என்ற பெயர் வழங்கப்படுகிறது. கோச்சார ரீதியாக அவர் சஞ்சரிக்கும் இடங்களுக்குரிய பலன்களை முழுமையாக அவர் வழங்குவார்.

ராசிக்கு ஏழில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலத்தை கண்டக சனிக்காலம் என்று கூறுவர். இக்காலத்தில் பல்வேறு பிரச்சனைகள், கருத்து வேறுபாடு, கணவன் மனைவிக்குள் பிரிவு, தொழில் ரீதியாக அலைச்சல், தீயோர் சேர்க்கையால் அவப்பெயருக்கு ஆளாகுதல். மர்ம உறுப்புகளில் ரணம், அல்லது நோய். வாழ்க்கைத்துணைக்கு ரோகம், வாழ்க்கைத் துணையிடம் இருந்தும் பிள்ளைகளிடமிருந்தும் தனித்து வாழக்கூடிய நிலை உண்டாவதுடன், இருக்கும் இடத்தை விட்டு வேறு இடம் சென்று வாசம் செய்யும் நிலையும் சிலருக்கு உருவாகும்.

அந்நிய நபர்களால் அலைச்சல், பாதிப்பு, கண்டங்கள், பணவிரயம் உண்டாகும் என்பது பொதுவிதி என்பதால் இக்காலத்தில் எதிர்பாலினரின் நட்பு தவறான உறவில் கொண்டுபோய் விடும். அப்படி உறவு கொண்டவருடன் மண வாழ்வும் காண நேரலாம். எதிர்பார்த்த வகையில் வருமானம் வரும் என்றாலும் ஆடம்பர, வீண் செலவுகள் அதிகரிக்கும். கணவன் மனைவியிடையே சில நேரங்களில் வாக்குவாதம் உண்டாகி பிரச்சனையில் கொண்டுபோய் விடும். நட்புகளிடமும் பிரச்சனைகள் தோன்றலாம். உங்கள் வாழ்க்கையில் சில படிப்பினை களையும் நீங்கள் அடைய வேண்டியதாக இருக்கும். உங்களுடன் இருப்பவர்களின் சுயமுகத்தை இக்காலத்தில் நீங்கள் பார்ப்பீர்கள்.

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் தாயாரின் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிவரும். தந்தையுடன் உறவுநிலை சுமுகமாக இல்லாமல் போகலாம். கணவன் மனைவி உறவு நிலையிலும் திருப்தி என்பது இல்லாமல் போகும். மனநிலையும் உடல் நிலையும்

ஒரு நிலையில் இல்லாமல் இருக்கும். எதிரிகளின் கை ஓங்கும். செய்து வரும் தொழிலில் சில சங்கடங்கள் ஏற்படும். அரசு பணியில் உள்ளோருக்கு மேலதிகாரிகளால் தொல்லை அதிகரிக்கும் என்பதால் இக்காலத்தில் நீங்கள் அனைத்திலும் நிதானித்து செயல்படுவது அவசியம்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு ஏழாம் இடத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் அங்கிருந்து உங்கள் ஜென்ம ராசியையும், சுக ஸ்தானம் எனும் நான்காம் இடத்தையும், பாக்ய ஸ்தான மாகிய ஒன்பதாம் இடத்தினையும் பார்வையிடுகிறார்.

பொதுவாக சனி பகவானின் பார்வை கொடியதாகும். அவர் பார்க்கும் இடங்கள் பாதிப்பிற்கு உள்ளாகும் என்பது விதியாகும்.

## பாக்ய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

மீன ராசிக்குள் சஞ்சரிக்கும் சனி பகவானின் மூன்றாம் பார்வை உங்கள் பாக்ய ஸ்தானத் திற்கு உண்டாவதால் எதிலும் நிம்மதியற்ற நிலை உருவாகும். எடுக்கும் வேலைகள் இழுபறியாகும். தந்தையின் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். தந்தை வழியிலும் தந்தை வழி உறவினர்களாலும் பிரச்சனைகளும் இக்காலத்தில் ஏற்படலாம். சிலர் தந்தையை இழக்க வேண்டியதாகவும் இருக்கும். தொழிலில் மந்தமான நிலையும், அலைச்சல் திரிச்சலுடன் லாபமின்மையும் நிலவும். ஒழுக்கத்திற்கும் பாதகம் வரலாம். தீய நண்பர்களின் சகவாசத்தால் பலவித இன்னல்கள் உருவாகலாம். வேலையில் மேலதிகாரிகளால் கண்டிக்கப்படும் நிலையும் உருவாகலாம். நினைத்தபடி எந்த ஒரு செயலையும் செய்து முடிக்க முடியாத நிலையும் இக்காலத்தில் இருக்கும்.

## ஜென்ம ராசிக்கு சனிப்பார்வை

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் சப்தம பார்வை உங்கள் ராசிக்கு உண்டாவதால் இக்காலத்தில் அனைத்திலும் நிதானமாக இருக்க வேண்டும். தவறு புரிவோருக்கு தண்டனை வழங்கும் நீதிபதி சனி பகவான், நன்மைகள் புரிவோருக்கு ஆதரவு அளிப்பவர் சனி பகவான். கர்மக்காரகனான சனி பகவான் உங்கள் பாவ புண்ணியங்களுக் கேற்ப இக்காலத்தில் பலன்களை வழங்குவார். பொதுவாக ராசிக்கு சனி பகவானின் பார்வை உண்டாவதால் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு பின்னடைவு உண்டாகலாம், உங்கள் அந்தஸ்துக்கு பாதிப்பு வரலாம். கௌரவம் பாதிக்கப்படலாம். உடல்நிலையில் தொந்தரவுகள் ஏற்படலாம். எதையோ இழந்ததுபோல் மனம் தவிக்க ஆரம்பிக்கும். திடீரென்று உண்டாகக்கூடிய பிணிகளால் ஆயுள் பற்றிய அச்சமும் தோன்றலாம். மனம் குழப்பம் அடைந்து, இருக்கும் இடத்தை விட்டு, மனைவி மக்களை விட்டு வெளியேறும் நிலையும் சிலருக்கு

உண்டாகலாம். அந்நிய பெண்களின் சகவாசத்தால் புத்தி மழுங்கி தவறான பாதையில் சென்றும் வருத்தப்படலாம். ஏன் பிறந்தோம்? எதற்காக பிறந்தோம்? என்ற கேள்விகளும் இக்காலத்தில் எழும். திட்டமிட்டபடி எதையும் செய்ய முடியாமல், போட்டிகளை சமாளிக்க முடியாமல் தடுமாறுவீர்கள். நட்பு வட்டத்திலும் பலவித சங்கடங்கள் உண்டாகும்.

## சுக ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

நாம் நன்றாக இருக்கிறோம் என்றால் செல்வ செழிப்போடு இருப்போம், சுக போகத்தோடு வாழ்வோம். மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பத்தாம் பார்வை உங்கள் சுக ஸ்தானமான நான்காம் வீட்டிற்கு உண்டாவதால், நேற்றுவரை உங்களுக்கிருந்த சந்தோஷம், நிம்மதி இன்றைக்கில்லை, நேற்று வரை கிடைத்த சுகம், ஆரோக்கியம், செல்வாக்கு இன்றைக் கில்லை என்ற நிலை ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். உடலில் அசதி உண்டாகும். தாயாரின் உடல் நலனில் அதிக அக்கறை செலுத்த வேண்டிவரும். சிலர் தாயாரை இழக்க வேண்டியதாகவும் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவும் இழப்பும் உண்டாகலாம். சிலருக்கு பூமி மற்றும் வாகனங்களை விற்க வேண்டிய நிலையும் உருவாகும். இல்லையென்றால் களவு போகும். கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை உருவாகும். கடன் தொந்தரவு மனதை வாட்டும். உடல் நலன், மனநலம் பாதிக்கப்படும். இவை எல்லாம் ஏழாம் வீட்டில் பிரவேசிக்கும் சனிபகவானால் உண்டாகிடக்கூடிய பொதுப்பலன்களாகும். என்றாலும் திசா புத்தி சாதகமாக இருந்தால் இப்பலன்களிலும் மாற்றம் ஏற்படும். சங்கடங்கள் உங்களை நெருங்காமல் தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போனதுபோல் போகும்.

## அதிர்ஷ்டம் தருவார் அஸ்தமன சனி!

சப்தம சனியின் காலமான இக்காலம் உங்களுக்கு சங்கடமான காலமாக இருக்கும், அதிகபட்சமான நெருக்கடிகளை இக்காலத்தில் நீங்கள் சந்திக்க வேண்டியதாக இருக்கும் என்ற நிலையில், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி பகவான் அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் அவரால் உண்டாகும் சோதனைகளும் வேதனைகளும் பாதிப்புகளும் வந்தவழி தெரியாமல் விலகும்.

## வளம் தரும் வக்கிர சனி!

சனிபகவான் உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் கண்டக சனியாக சஞ்சரித்து பல்வேறு சங்கடங்களையும் இன்னல்களையும் உங்களுக்கு உண்டாக்கிடும் நிலையில், 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், 28.7.2027 முதல் 13.12.2027 வரையிலும் அவர் வக்கிரம் அடைகிறார் என்பதால் அந்த நிலைகளில் இருந்து மாற்றம் ஏற்படும். தடைபட்டிருந்த வேலைகள் நடந்தேறும்.

குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் முடிவிற்குவரும். உங்கள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

உங்களுக்கு உண்டான பிரச்சனைகள் குறைய ஆரம்பிக்கும். சரியாக திட்டமிட்டு செயல்படும் காரியங்களில் வெற்றி உண்டாகும். உங்கள் திறமையால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். ஆரோக்கியத்தில் சிறிய அளவில் பாதிப்புகள் உண்டாகும் என்றாலும் அவற்றிலிருந்து விடுபடுவீர்கள். உறவினர்களிடம் ஏற்பட்ட மனக்கசப்பு கொஞ்சம் கொஞ்சமாக மறையும். உங்களைப்புரிந்து கொள்ளவே முடியாது என்று மற்றவர்கள் நினைக்கும்படி உங்கள் செயல்பாடுகள் இருக்கும். இதற்கு முன்பு இருந்த நிலைகள் மாறும். உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். தடைபட்டிருந்த வேலைகள் ஒவ்வொன்றாக நடைபெற ஆரம்பிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். வீட்டில் சுப காரியங்கள் நடந்தேறும். தொழில் வியாபாரம் சூடு பிடிக்கும். எதையோ இழந்ததுபோல் இருந்த நிலை மாறி வாழ்க்கையில் நம்பிக்கைத் தோன்றும். கணவன் மனைவி உறவு சீராகும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

## கண்டக சனிக்கு குருவின் சுபத்துவம்

மங்களக்காரகன், ஞானக்காரகனான குருவின் பார்வைக்கு ஆளாகும் இடங்களும், கிரகங்களும் சுபத்துவம் அடையும் என்பது பொதுவிதியாகும். குருவின் ஆட்சி வீடான மீன த்தில் 6.3.2026 முதல் உங்களுக்கு கண்டக சனியாக சஞ்சரித்து பலன்களை வழங்கிவரும் சனி பகவான்மீது, 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் குருவின் பார்வை உண்டாவதால் இக்காலங்களில் உங்கள் செல்வாக்கு உயரும். தடைபட்ட வேலைகள் நடந்தேறும். குடும்பம், தொழில், உடல்நிலை, உத்தியோகம் போன்றவற்றில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். பொன், பொருள், பட்டம், பதவி, வீடு, வாகனம் என்ற கனவு நனவாகும்.

## பரிகாரம்

சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வணங்கி வழிபட்டு வருவதுடன், ஒருமுறை திருநள்ளாறு, அல்லது, திருக்கொள்ளிக்காடு, குச்சனூர் போன்ற இடங்களில் அருள் பாலிக்கும் சனீசுவர பகவான் சன்னதிகளுக்கு சென்று வழிபட்டு வருவதால் சங்கடங்கள் குறையும்.



# துலாம்

**சித்திரை 3, 4 ம் பாதங்கள் மற்றும் சுவாதி, விசாகம் 1, 2, 3 ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும்; ஜென்ம ராசி எதுவென்று தெரியாத ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; ர, ரா, ரி, ரு, ரே, ரோ, த, தா, தி, து, தே ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: சுக்கிரன்.

நட்சத்திர அதிபதிகள்: செவ்வாய், ராகு, குரு.

பாதகாதிபதி: சூரியன்.

மாரகாதிபதி: செவ்வாய்,

## துலாம் ராசிக்கு சத்ரு ஜெய சனி

நினைத்த வாழ்க்கையை நினைத்தபடி வாழக்கூடிய துலாம் ராசியினரான உங்களுக்கு, அதிர்ஷ்டக்காரகனான சுக்கிரன் ராசிநாதனாக இருந்தாலும், கர்மக்காரகன், ஜீவனக்காரகனான சனி பகவான் உங்கள் ராசியில்தான் உச்சமடைகிறார். அத்துடன் உங்கள் சுக ஸ்தானத்திற்கும், பூர்வ புண்ணிய புத்திர ஸ்தானத்திற்கும் சனி பகவானே அதிபதியாகிறார்.

ஒவ்வொருவர் பிறந்த நேரத்திற்கு ஏற்ப துலாம் ராசிக்காரர்களின் ஜாதகத்தில் சனி பகவான் எந்த வீட்டில் வேண்டுமென்றாலும் சஞ்சரிக்கலாம். பிறவி ஜாதகத்தில் அவர் இருந்த நிலையை வைத்தும் அவர் உங்களுக்கு என்ன செய்வார் என்று கூறிவிட முடியும். அவருடைய பார்வையை வைத்தும் பலன்களை அறிய முடியும்.

இதுவரையில் உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமான ஐந்தாம் வீட்டில் சஞ்சரித்து வந்த சனி பகவான் உங்களுக்கு நிறையவே சங்கடங்களை வழங்கி வந்தார். குடும்பத்தில் நிம்மதியற்ற நிலையினை ஏற்படுத்தி வந்தார். பிள்ளைகளால்

சங்கடம் அடைந்திடக்கூடிய நிலையினை உண்டாக்கி வந்தார். பிரச்சனைக்கு மேல் பிரச்சனை களை சந்திக்கும் அளவிற்கு போராட்டமான நிலையினை வழங்கி உங்களை சோதித்தார். உங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் சோதனையை ஏற்படுத்தினார். உங்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டியவற்றையும் கிடைக்காத அளவிற்கு தடைகளை உண்டாக்கினார். காதலில் சங்கடம், திருமணம் நடந்தவர்களுக்கு குழந்தை பாக்யம் இல்லையே என்ற ஏக்கம், தாய்மாமன் வழியில் பிரச்சனைகள், உறவுகளிடம் மோதல், பூர்வீக சொத்தில் சட்ட சிக்கல்கள் என்று நிம்மதியற்ற நிலையினையும் சங்கடங்களையும் அனுபவித்திருப்பீர்கள். நீங்கள் இருக்கும் இடத்திலும் நிம்மதி என்பது இல்லாமல் போயிருக்கும்.

கிரகங்களில் அசுப கிரகம் என்று பெயர் பெற்றவரான சனி பகவான், தான் பார்க்கும் இடங்களுக்கு கொடிய பலன்களையும், தான் இருக்கும் ஸ்தானத்திற்குரிய பலன் எதுவோ அதையே ஜாதகருக்கு வழங்கிடக்கூடியவர். கடந்த இரண்டரை வருடத்தில் உங்களுக்கு ஐந்தாம் அதிபதியான சனி பகவான், அவரே ஐந்தாம் இடத்தில் சஞ்சரித்ததால் பூர்வ புண்ணிய, புத்திர பலன்களை எல்லாம் கெடுத்து வந்தார். உங்களுக்கு நிம்மதியற்ற நிலையினையும், ஏமாற்றங்களையும், சங்கடங்களையும், பிரச்சனைகளையும் வழங்கி வந்தார்.

இந்த நிலையில் *6.3.2026* முதல் உங்கள் ராசிக்கு ஆறாம் வீடும், உங்களுக்கு ருண, ரோக, சத்ரு ஸ்தானமுமான மீன ராசிக்குள் சஞ்சரிக்கிறார் சனி பகவான்.

உங்கள் ராசியான துலாத்தில் உச்சம் அடையும் சனி பகவான் மீனத்தில் நட்பாகவே சஞ்சரிக்கிறார். இதற்கும் மேலாக எந்த ராசியில் பிறந்தவராக இருந்தாலும் அந்த ஜாதகரின் ராசிக்கு ஆறாம் ராசியில் சனிபகவான் சஞ்சரிக்கும் போது நன்மைகளுக்குமேல் நன்மைகளை வழங்குவார். வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக்கொடுப்பார். எல்லா ஜாதகருக்குமே அவரவருடைய ராசிக்கு *3, 6, 9, 11*ம் வீடுகளில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம்தான் அவர்களுடைய வாழ்க்கையில் யோக காலமாகும்.

உங்கள் ராசிநாதனான சுக்கிரனுக்கு சனி பகவான் நட்புக்காரகன் என்பதால் உங்களுக்கு இக்காலம் பிரபலமான யோக காலம் என்றே சொல்ல வேண்டும். இக்காலத்தில் உங்களுக்கு பல்வேறு நன்மைகள் உண்டாகப் போகிறது. உடல்நிலையில், மனநிலையில் ஏற்பட்ட பாதிப்புகள் இருந்த இடம் தெரியாமல் மறையப்போகிறது. பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றி உண்டாகும். தொழில், உத்தியோகம், அரசியலில் ஏற்பட்ட நெருக்கடிகள் எல்லாம் நீங்கப்போகிறது. உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் பலமிழந்து போவதுடன் உங்களிடமே சமாதானம் பேசுவதற்கு வருவார்கள். இழுபறியாக இருந்த விவகாரங்கள், வழக்குகள் முடிவிற்கு வரும். உங்கள் செல்வாக்கு உயரும். ஒரு சிலருக்கு புதிய பொறுப்பும் பதவியும்

கிடைக்கும். அந்தஸ்தும் செல்வாக்கும் உயரும். உங்களுக்குள் ஒரு அபார ஆற்றல் உண்டாகும். நேற்றுவரை போராட்ட மயமாக இருந்த நிலை இனி மாறும். உங்கள் வாழ்க்கையில் ஆறாமிட சனியின் காலம் திருப்பு முனைக்குரிய காலமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். பொன் பொருட்கள் அதிகரிக்கும். பூர்வ புண்ணிய சொத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் முடிவிற்குவரும். வராமல் இருந்த சொத்து உங்கள் கைக்குவரும். ஒரு சிலர் புதிய வாகனம் வாங்குவீர்கள். வியாபாரம் லாபம் தரும். பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகி உங்கள் செல்வாக்கு உயரும். தம்பதியரிடையே ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தை பாக்யத்திற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். இதுவரை பலவகையில் முயற்சித்தும் நடைபெறாமல் இருந்த வேலைகள் இக்காலத்தில் முடியும். அரசு பணியில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். முடங்கிக்கிடந்த தொழில் முன்னேற்ற மடையும். வருமானம் அதிகரிக்கும். வேலைக்காக முயற்சித்து வருபவர்களுக்கு தகுதியான வேலைக்கிடைக்கும்.

இவையாவும் துலாம் ராசியினருக்கு ஆறாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியால் உண்டாகக் கூடிய பொதுப் பலன்களாகும். சுய ஜாதகம் பலம் பெற்றவர்களுக்கும், நட்பான தசா புத்தி நடப்பவர்களுக்கும் பலன்கள் பன்மடங்கு அதிகரிக்கும் என்பதுடன் 12 வீடுகளில் உலவும் மற்ற கிரகங்களின் சஞ்சாரங்களினாலும் பார்வைகளாலும் சேர்க்கைகளாலும் இக்காலத்தில் எப்போதாயினும் சிற்சில பாதிப்புகள் உருவாகும் என்றாலும் அவை உங்களை எதுவும் செய்து விடாது என்றே சொல்ல வேண்டும்.

சனி பகவானின் ஆறாம் இட சஞ்சார நிலை உங்களுக்கு சாதகமாக இருக்க, அங்கிருந்து தன் 3, 7, 10 ம் பார்வைகளால், உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானமான எட்டாம் இடத்தையும், விரய ஸ்தானமான பனிரெண்டாம் இடத்தையும், சகாய ஸ்தானமான மூன்றாம் இடத்தையும் பார்வையிடுகிறார்.

## அஷ்டம ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவான் தான் சஞ்சரிக்கும் இடங்களுக்கு பலன்கள் வழங்குவதுபோல், தான் பார்க்கும் பாவகங்களுக்கும் பலன்கள் வழங்குபவராவார். சனி பகவானின் பார்வைகள் படும் இடங்கள் பாதிப்பிற்கு உள்ளாகும் என்பது பொது விதி என்றாலும் அவருடைய பார்வை இரண்டு விதமான பலன்களை உண்டாக்கிடக் கூடியது. அவற்றில் ஒன்று உயிர்க்காரகம் மற்றும் ஒன்று பொருள்காரகம் இரண்டில் ஏதேனும் ஒன்றில் சங்கடங்களை ஏற்படுத்தக் கூடியவர் சனி பகவான்.

6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு ஆறாம் வீட்டில் சஞ்சரிப்பவர் தனது மூன்றாம் பார்வையால் உங்கள் ராசிநாதனின் வீடும் உங்களுக்கு அஷ்டம ஸ்தானமுமான ரிஷபத்தைப்

பார்ப்பதால், உடல் நிலையில் இருந்த பாதிப்புகள் அகலும், பெரிய அளவில் அச்சுறுத்திய நோய்களும் மருந்து மாத்திரைகளால் குணமாகிவிடும். உங்கள் கௌரவம் சிறப்படையும் என்பதுடன், திடீர் அனுகூலமும் ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றிகளைக் காணமுடியும். எட்டிச்சென்றவர்கள் கிட்டே வருவார்கள். சட்ட விவகாரங்களிலும் எதிர்பார்த்த வெற்றியைக் காண்பீர்கள். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சோர்ந்திருந்த நிலை விலகி சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள். மனைவி வழியில் தக்க சமயத்தில் உதவிகள் கிட்டும் என்றாலும், யாரையும் நம்பி இக்காலத்தில் செயல்படாதீர்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்தும் போடாதீர்கள்.

## விரய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் ஏழாம் பார்வை உங்கள் விரய ஸ்தானத்திற்கு உண்டாவதால் பல வழியிலும் செலவு அதிகரிக்கும். அதன்வழியே உங்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். பொது சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு செல்வாக்கு அதிகரிப்பதுடன் ஆதாயமும் உண்டாகும். குடும்பத்திற்குத் தேவையான வசதிகளை உருவாக்கிக்கொள்ள முடியும். வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். துணையின் அக்கறை அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகமும் கிட்டும். அஷ்டம ஸ்தானம் என்பது பாக்ய ஸ்தானத்திற்கு விரய ஸ்தானம் என்பதால் சிலர் தந்தையைப் பிரிய நேரிடும். இக்காலத்தில் தந்தையின் உடல்நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

## சகாய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் பத்தாம் பார்வை உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான சகோதர, கீர்த்தி சகாய ஸ்தானத்திற்கு கிடைப்பதால் சகோதர சகோதரிகள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உங்கள் தைரியம் கூடும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாக்கில் தெளிவு இருக்கும். மற்ற வர்கள் உங்கள் ஆலோசனைகளை எதிர்பார்க்கும் நிலை உண்டாகும். அனைத்திலும் லாபம் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். செல்வாக்கு உயரும். இட வகைகளில் ஏற்பட்ட பிரச்சனைகள் அகலும். உங்கள் அறிவாற்றல், பேச்சாற்றல், செல்வாக்கு யாவும் அதிகரிக்கும். உங்கள் பெருமையை ஊரார் பேசக்கூடிய நிலை உண்டாகும்.

என்றாலும் சனி பகவான் தவறான வழிகளில் செல்வோருக்கு தண்டனைகள் வழங்கிடக் கூடிய நீதிமான் என்பதால் உங்கள் ஒழுக்க நிலையாலும் நேர்மையான செயல்பாடுகளாலும்தான் உங்களுக்கு யோகப் பலன்கள் உண்டாகும்.

## அதிர்ஷ்டம் தருவாரா அஸ்தமன சனி?

சனி பகவான் ஆறாம் இடத்தில் சஞ்சரித்து உங்களுக்கு பேராற்றலை உண்டாக்கி பீடுநடைப் போடவைத்தாலும் அவருடைய பார்வைகள் அஷ்டம ஸ்தானத்திற்கும், விரய

ஸ்தானத்திற்கும், சகாய ஸ்தானத்திற்கும் கிடைப்பதால் வெட்டி அலைச்சல், வீண்செலவு, தேவையற்ற முயற்சி என்ற சங்கடங்களையும் இக்காலத்தில் சந்திக்க வேண்டியதாக உள்ள நிலையில், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி பகவான் அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் உங்கள் செல்வாக்கு உயரும். வீண் செலவுகள் கட்டுப்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியாகும்.

## வளம் தருவாரா வக்ர சனி?

சனி பகவான் ஒரு வீட்டில் இரண்டரை ஆண்டுகள் சஞ்சாரம் செய்தாலும், அவர் தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளும் ஒரே நிலையில் இருப்பதில்லை. இருக்கும் இடத்தில் வக்கிரகதி அடைவார். சனிபகவான் சஞ்சரிக்கும் ராசியில் இருந்து அஞ்சு, ஆறு, ஏழு, எட்டாம் வீடுகளில் சூரியன் சஞ்சரிக்கும் காலங்களில் சனிபகவானுக்கு வக்கிரகதி உருவாகிறது என்பதால், மாத கிரகமான சூரியன், சனி நின்ற ராசியிலிருந்து 5, 6, 7, 8 ம் ராசிகளில் பிரவேசிக்கும் காலங்களில் எல்லாம் சனி பகவானுக்கு இந்நிலை உண்டாகும். இத்தகைய காலக்கட்டத்தில் நாம் மேலே சொன்ன பலன்கள் மாறுபடும். இக்காலத்தில் 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், 28.7.2027 முதல் 13.12.2027

வரையிலும் சனி பகவான் வக்கிரகதி அடைவதால் மேலே சொன்ன முன்னேற்ற மான பலன்களில் மாற்றங்கள் இருக்கும் என்றாலும் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகள் இக்காலத்தில் உங்களைப் பாதுகாக்கும்.

## சத்ரு ஜெய ஸ்தான சனிக்கு குருவின் சுபத்துவம்

மங்களக்காரகனான குரு பகவான் பார்க்கும் இடங்கள் சுபிட்சமாகும் என்பது பொதுவிதி. சனி பகவான் சஞ்சரிக்கும் ராசியின் அதிபதி குரு ஆவார்.

26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் குருவின் பார்வை மீனத்தில் சஞ்சரிக்கும் சனிக்கு உண்டாவதால் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றியாகும். நினைத்த காரியங்கள் நடந்தேறும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மங்கள ஓசை கேட்கும், படிப்பு, வேலை, திருமணம், குழந்தை பாக்யம், வீடு, வாகனம் என்ற கனவுகள் நனவாகும்.

## பரிகாரம்

சனிக்கிழமையன்று சனி பகவானுக்கு அபிஷேக பூஜை செய்வதும், எள்ளு சாதம் செய்து நிவேதனம் செய்து அதை ஏழைகளுக்கு வழங்குவதும், அகல்விளக்கில் சுத்தமான நல்லெண்ணெய் தீபமேற்றி வழிபட்டு வருவதும் நன்மையாகும்.



# விருச்சிகம்

**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம் மற்றும் கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும்; ஜென்ம ராசி எதுவென்று தெரியாத கார்த்திகை மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; தோ, ந, நா, நி, நூ, து, தூ, நே, நோ, ய, யா, யி, யு ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: செவ்வாய்.

நட்சத்திர அதிபதிகள்: குரு, சனி, புதன்.

பாதகாதிபதி: சந்திரன்.

மாரகாதிபதி: சனி, புதன்

## விருச்சிக ராசிக்கு பூர்வ புண்ணிய சனி

எந்த ஒன்றிலும் முதன்மையாக இருக்க வேண்டும், நாம் சொல்வதைத்தான் மற்றவர்கள் கேட்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட விருச்சிக ராசியினரே, இதுவரையில் உங்கள் ராசிக்கு சுக ஸ்தானம், மாதுர் ஸ்தானம் என்னும் நான்காம் வீட்டில், அர்த்தாஷ்டமச்சனியாக சஞ்சரித்து வந்த சனிபகவான் பல வழிகளிலும் உங்களுக்கு இடையூறுகளை வழங்கி வந்தார். எந்த நன்மைக்கும் வழி இல்லாமல் அலைக்கழித்து வந்தார். உடல்நிலையில் பாதிப்பு, மருத்துவச்செலவு என்று சிரமத்திற்கு மேல் சிரமத்திற்கு ஆளாகி இருப்பீர்கள். ஒரு சிலரின் தாயாருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கும். நிம்மதியற்ற நிலை நீடித்திருக்கும். குடும்பத்திலும் வீண் விரோதம், ஊர்விட்டு ஊர் செல்லும் நிலை, கல்வியில் தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, வாகனத்தில் பிரச்சனை, சுகத்திற்கு பாதிப்பு, நிலபுலன்களில் வருவாய் இன்மை என்று உங்களைப் பாடாய்ப்படுத்தி வந்தார் சனி பகவான். எடுத்த வேலைகள் முடிந்து விடக்கூடிய நிலையில் அதில் தடைகள், உழைப்பிற்கேற்ற, முயற்சிக்கேற்ற

வருமானம் இல்லை என்ற வருத்தம், ஓடோடி உழைத்தாலும் கையில் மிச்சம் மீதி இல்லை என்ற நெருக்கடி, மன உளைச்சல், சங்கடம், போராட்டம், மருத்துவச்செலவு என்று அதிகரிக்க அதிகரிக்க, எல்லாம் அவன் செயல் என்ற முடிவிற்கு வந்திருப்பீர்கள். வாழ்வதே பெரும் போராட்டமாகி இருக்கும். இறைவனைத் தேடிச்சென்று சரண் அடைந்திருப்பீர்கள்.

கிரகங்களில் அசுப கிரகம் என்று பெயர் எடுத்த சனி பகவான் நான்காம் வீட்டில் சஞ்சரிக்கும்போது அவருடைய பத்தாம் பார்வையால் உங்கள் ராசியையும் பார்த்து வந்தார், சனி பகவானின் பார்வையில் நீங்கள் சிக்கியதால் பெரும் போராட்டமாக உங்கள் வாழ்க்கை இருந்திருக்கும். விரோதத்தை உண்டாக்கி எதிர்ப்பை அதிகரித்திருப்பார்.

இந்த நிலையில் 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு ஐந்தாம் வீடான பூர்வ புண்ணிய, புத்திர ஸ்தானமான மீன ராசியில் சஞ்சாரம் செய்கிறார். மீனம் சனி பகவானுக்கு நட்பு வீடாகும். உங்கள் ராசிநாதனுக்கு சனி பகவான் பகையானவர் என்றாலும், கோச்சார ரீதியாக அவர் எந்த இடத்தில் சஞ்சரிக்கிறாரோ அந்த இடத்திற்குரிய பலன்களை வழங்கிட வேண்டிய நிலைக்கு ஆளாகிறார். உங்கள் ராசிக்கு மூன்றுக்கும், நான்கிற்கும் உடைய சனி பகவான் ஐந்தாம் இடத்தில் சஞ்சரிக்கும் இக்காலத்தில் நன்மையை வழங்குவாரா? அல்லது சங்கடங்களை வழங்குவாரா என்பதைப் பார்ப்போம்.

கோச்சார ரீதியாக ஐந்தாம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் போது, அவருடைய பார்வை உங்கள் ராசியை விட்டு விலகுகிறது என்பதே உங்களுக்குப் பெரும் நன்மையாக இருக்கும். ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், இடையூறுகள், இன்னல்கள், குடும்பத்தில் பிரச்சனை கள், கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு, பிரிவு, செய்து வரும் தொழிலில் நஷ்டம், தடைகள், மேல் அதிகாரிகளிடம் விரோதம், பிரச்சனைகள், அவமானங்கள் உண்டாகலாம். நண்பர்கள், உறவினரிடம் கருத்து வேறுபாடு. வரவைவிட செலவு அதிகம். கடன் தொல்லைகள். வழக்குகளில் எதிர்மறையான பலன். பிள்ளைகளால் மனம் வருந்த வேண்டிய நிலை. கல்வியில் தடங்கல். மேற்படிப்பு முயற்சியும் கடுமையான சிரமத்தின் மீது தொடர வேண்டிய நிலை. விவசாயத்திலும் செலவு அதிகம் வரவு குறைவு என்ற நிலை. பொன் பொருளை விற்று நிலைமைகளை சமாளிக்க வேண்டிய நிலையும், குலதெய்வம் குடும்ப தெய்வம் என்ற நாடிச்செல்ல வேண்டிய நிலையும் உண்டாகும். நிலையான எண்ணமும் திடமான புத்தியும் இல்லாத நிலையில் இருப்பீர்கள். எதிர்பாலினரின் நட்பின் காரணமாக உங்கள் பெயர் கெடுவதற்கும் வாய்ப்புண்டு. இவை யாவும் ஐந்தாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானால் உண்டாகிடக் கூடிய பொதுப் பலன்களாகும்.

சுயஜாதகம் பலம் பெற்றவர்களுக்கும், நட்பான திசா புத்தி நடப்பவர்களுக்கும் இப்பலன்கள்

மாறுபடும் என்பதுடன், பனிரெண்டு ராசிகளில் உலவும் மற்ற கிரகங்களின் பார்வைகளாலும், சேர்க்கைகளாலும் இக்காலத்தில் நன்மைகளும் நிகழக்கூடும். எனவே ஐந்தாம் வீட்டில் சனி சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டு காலமும் ஒரே மாதிரியான பலன்தான் நடக்கும் என்று பயந்து விடாதீர்கள்.

சனிபகவானின் சஞ்சார நிலையைப் போலவே அவருடைய பார்வைகளுக்கும் பலன்கள் உண்டு. ஐந்தாம் வீட்டில் சஞ்சரித்து ஸ்தானப் பலன்களை வழங்குபவர் அங்கிருந்து தன் 3, 7, 10 ம் பார்வைகளால் உங்கள் ராசிக்கு குடும்ப ஸ்தானமான இரண்டாம் இடத்தையும், களத்திர ஸ்தானமான ஏழாம் இடத்தையும், லாப ஸ்தானமான பதினொன்றாம் இடத்தையும் பார்வை யிடுகிறார்.

## களத்திர ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

மீன ராசியில் சஞ்சரிக்கும் சனிபகவானின் மூன்றாம் பார்வை உங்கள் களத்திரம் மற்றும் நட்பு ஸ்தானத்திற்கு உண்டாவதால், வாழ்க்கைத்துணை வழியே பிரச்சனைகள் உருவாகலாம். துணையின் உடல்நிலையில் சங்கடங்கள் தோன்றலாம், வாய்ப்பேச்சும் வில்லங்கத்தை உருவாக்க லாம். கூட்டுத்தொழில் புரிபவர்கள் கூட்டாளிகளிடம் மனக்கசப்பை காணலாம். அதனால் தொழில் தள்ளாடலாம். காதல் விவகாரங்களும் எதிர்பார்த்த நன்மையை அளிக்காமல் தகராறு வம்பு தும்பு என்று மாறலாம். சிறு சிறு விபத்துகள் நடக்கவும் வாய்ப்புள்ளதால் நிதானம் மிக மிக அவசியம். திருமணம் நடக்காமல் இருப்பவர்களுக்கு இக்காலத்தில் திருமணம் கூடிவரும் என்றாலும் அது ஏதோ ஒருவகையில் எதிர்மறையான நிலைக்கு கொண்டு செல்லலாம் என்பதால் அவசரப்பட்டு திருமணம் நடத்தாமல் இருப்பது நல்லது. எதிர்பாலினரிடம் எச்சரிக்கை யுடன் இருப்பதும் நன்மையை உண்டாக்கும். கூட்டுத் தொழிலிலும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற நிலைக்கு வராமல் அனுசரித்துச்செல்வது இக்காலத்தில் நன்மையாகும். முடிந்தவரை வேகத்திற்கு இடம் கொடுக்காமல் விவேகத்திற்கு இடம் கொடுப்பது நன்மையாகும்.

## லாப ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் ஏழாம் பார்வை உங்கள் ராசிக்கு லாப ஸ்தான த்தில் பதிகிறது, சனி பகவான் பதினொன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் காலம் உங்களுக்கு லாப காலம், யோக காலம் என்றால், பதினொன்றாம் இடத்தை அவர் பார்க்கும் காலத்திலும் வருவாய் அதிகரிக்கும். வரவேண்டிய பணம்வரும். தொழில், வியாபாரம் முன்னேற்ற மடையும். புதிய முயற்சிகள் லாபமாகும். மூத்த சகோதரர்களின் ஆதரவு அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையை இழந்தவர்களுக்கு மறுமணம் நடைபெறக்கூடிய நிலை உண்டாகும். ஒரு சிலருக்கு வாழ்க்கைத் துணைக்கும் அப்பால் ஒரு உறவு ஏற்படும். மனம் பல வழிகளிலும்

செல்லும். அதனால் சிலருடைய குடும்பத்தில் குழப்பமும் ஏற்படும். முடங்கிக்கிடந்த தொழில் முன்னேற்றமடையும், கேட்ட இடத்தில் இருந்து பணம் வரும், வங்கியினர் உங்களைத் தேடிவந்து கடன் கொடுப்பர். ஒரு சிலர் இருக்கும் இடம் விட்டு வேறு இடத்திற்கு இடம் பெயரலாம். இக்காலத்தில் மகிழ்ச்சியை மட்டுமே மனம் எதிர்பார்த்து அதற்கேற்பவே செயல்படுவீர்கள் என்பதால் உடல் நிலையில் சில சங்கடங்கள் தோன்றலாம். எனவே நோய் வந்தவுடன் மருத்துவரை சந்தித்து சிகிச்சை மேற்கொள்வது நன்மையாக இருக்கும்.

## தன, குடும்ப ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பத்தாம் பார்வை உங்கள் தன குடும்ப வாக்கு ஸ்தானத்திற்கு உண்டாவதால், குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை உருவாகும். பண விவகாரங்களில் அதிகபட்சமான கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். ஒரு சிலருக்கு பண விவகாரம் இழுபறியை ஏற்படுத்தும். நெருக்கடியை உண்டாக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் தடுமாறுவீர்கள். அதனால் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவீர்கள். இக்காலத்தில் கண்பார்வை பாதிக்கவும் வாய்ப்பிருப்பதால் கண்ணில் பிரச்சனை வந்ததும் அதற்குரிய மருத்துவரை சந்தித்து சிகிச்சை எடுத்துக் கொள்வது நன்மையாக இருக்கும்.

## அதிர்ஷ்டம்தரும் அஸ்தமன சனி

சனிபகவான் ஐந்தாம் இடத்தில் சஞ்சரிப்பதால் மனம் அலைமோதும், செயல்கள் தடுமாறும், ஆசை அதிகரிக்கும். அதனால் குடும்பத்திற்குள் குழப்பம் உண்டாகும், தம்பதிகளுக்குள் விரிசல் ஏற்படும் என்பதெல்லாம் அவரால் உண்டாகும் பலன்களாக இருந்தாலும், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி பகவான் அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் அவரால் ஏற்பட்ட பாதகப்பலன்கள் விலகும். தெம்பும் தைரியமும் அதிகரிக்கும். எடுத்த வேலைகள் வெற்றியாகும்.

## வளம்தரும் வக்கிர சனி

சனி பகவான் ஒரு வீட்டில் இரண்டரை ஆண்டுகள் சஞ்சாரம் செய்தாலும், அவர் தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளும் ஒரே நிலையில், ஒரே நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதில்லை. சனி பகவான் சஞ்சரிக்கும் ராசியில் இருந்து 5, 6, 7, 8 ம் வீடுகளில் சூரியன் சஞ்சரிக்கும் நான்கு மாதங்களும் வக்கிரகதி அடைவார். அக்காலத்தில் அவர் உங்களுக்கு வழங்கி வந்த நெருக்கடிகள் விலகும். அத்துடன் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகளாலும் உங்களுக்கு நன்மைகள் நடைபெறும்.

உங்கள் ராசிக்கு ஐந்தாம் வீடான மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான், 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், மீண்டும் 28.7.2027 முதல் 13.12.2027 வரையிலும் வக்கிர

கதியினை அடைவதால் சனி பகவனால் உங்களுக்கு ஏற்பட்ட பாதகமான பலன்கள் சூரியனைக்கண்ட பனிபோல் விலகும். உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் இருந்த இடம் தெரியாமல் போகும். வியாபாரம் தொழில் முன்னேற்றமடையும். உங்கள் மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் முடிவிற்கு வரும். எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். புதிய சொத்து சேரும்.

## பூர்வ புண்ணிய ஸ்தான சனிக்கு குருவின் சுபத்துவம்

கிரகங்களில் மங்களக் காரகனான குரு பகவான் பார்க்கும் இடங்கள் சுபிட்சமாகும் என்பது பொது விதி! சனி பகவான் சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதி குரு பகவானாவார்! உங்கள் ராசிக்கு தன குடும்பாதிபதியும், பூர்வ புண்ணியாதிபதியும் குரு பகவானே ஆவார். அதன் காரணமாகவே குடும்பத்தின் மீது எப்பொழுதும் உங்களுக்கு ஒரு பிடிப்பு இருக்கும்! குழந்தை பாக்யமும், பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசமும் இருக்கும்! உங்கள் வாழ்க்கையும் மற்றவர்கள் பார்வைக்கு சிறப்பானதாகவே இருக்கும்! உங்கள் பூர்வ புண்ணியாதிபதியான குரு பகவான் 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானைப் பார்ப்பதால் சனியின் தாக்கம் உங்களை நெருங்காமல் போகும், அசுப கிரகமான சனி பகவான் சுபவானாக மாறி உங்களை முன்னேற்றப் பாதையில் நடைபோட வைப்பார், மறைந்த செல்வம், செல்வாக்கு அந்தஸ்து எல்லாம் மீண்டும் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். புதிய சொத்து சேரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். நீண்டநாள் கனவுகள் நனவாகும்.

13.11.2026 முதல் யோகக் காரகன் ராகு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் எடுத்த வேலையெல்லாம் வெற்றியாகும்! வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும், தைரியமும் தன்ன ம்பிக்கையும் கூடும்.

சனி பகவானின் அஸ்தமன காலங்கள், வக்கிர காலங்கள், குரு பகவானின் பார்வை, சகாய ஸ்தான ராகு என்று உங்கள் வாழ்க்கை வளமாகும்! ஐந்தாமிட சனியால் ஏற்படக்கூடிய பாதகப்பலன்கள் இம்முறை உங்களை எதுவும் செய்யாமல் போகும்.

## பரிகாரம்

சனிக்கிழமைதோறும் நவகிரகத்தில் உள்ள சனீஸ்வரருக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றி வழிபட்டு வருவதுடன் இயலாதவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் உணவு உடை வழங்கி வழங்கி வர சங்கடங்கள் குறையும்.



# தனுசு

## மூலம், பூராடம், உத்திராடம் 1 ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கும்; ஜென்மராசி எதுவென்று தெரியாத மார்கழி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; யே, யோ, பா, பீ, பூ, த, ப, ட, பே ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்

ராசியின் அதிபதி: குரு.

நட்சத்திர அதிபதிகள்: கேது, சுக்கிரன், சூரியன்.

பாதகாதிபதி: புதன்.

மாரகாதிபதி: புதன், சுக்கிரன்

### தனுசு ராசிக்கு அர்த்தாஷ்டம சனி

சமூகத்தில் தனித்த செல்வாக்கும், நினைத்ததை சாதித்து வருபவருமான உங்களுக்கு, சனிபகவான் நட்பானவர். உங்கள் ராசியான தனுசுவிற்கு தன குடும்பாதிபதியும், சகாய ஸ்தானதிபதியுமானவர் சனி பகவான்.

இதுவரையில் உங்கள் ராசிக்கு கீர்த்தி, சகாய, சகோதர ஸ்தானமான மூன்றாம் வீட்டில் சஞ்சரித்து வந்த சனி பகவான், உங்களுக்கு பல வழிகளிலும் நன்மைகளையே வழங்கி வந்தார். நீங்கள் எடுத்த முயற்சிகளில் எல்லாம் வெற்றியை உண்டாக்கி வந்தார். ஏழரை ஆண்டு காலம் நீங்கள் அனுபவித்த போராட்டங்களில் இருந்து உங்களை விடுவித்தார். அசாதாரண துணிச்சலையும், அதனால் எடுத்த காரியங்களில் வெற்றிகளையும் உங்களால் காண முடிந்தது. பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றம் கிடைத்திருக்கும். வேலையிலும் தொழிலிலும் நீங்கள் நினைத்தது நடந்திருக்கும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு கிடைத்திருக்கும். அரசாலும் சலுகைகள் கிடைக்கப் பெற்றிருப்பீர்கள். குடும்பத்தில் செழிப்பும் சந்தோஷமும், சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் உண்டாகி இருக்கும். ஒரு சிலர் தொழில் துறையில் முன்னேற்றம்

அடைந்திருப்பீர்கள். பொது வாழ்க்கையிலும் புகழ்மிக்கவராக மாறி இருப்பீர்கள்.

சனி பகவான் 3, 6, 9, 11 ம் வீடுகளில் சஞ்சரிக்கும் காலங்களில் ஜாதகருக்கு அபரிமிதமான பலன்களை வழங்குவார். பத்தாம் இடத்தில் சஞ்சரிக்கும்போது மிதமான பலன்களை வழங்குவார். அதேபோல் சனி பகவானின் பார்வைகள் பாதிப்பை ஏற்படுத்தும் என்றாலும், மூன்று, ஆறு, பதினொன்றாம் வீடுகளில் அவருடைய பார்வைகள் பதியும்போது அந்த இடங்களுக்கு சனிபகவான் நன்மைகளையே செய்வார் என்பது ஜோதிட விதி.

இந்த நிலையில், கடந்த இரண்டரை வருடமும் மூன்றாம் வீட்டில் சஞ்சரித்து உங்களுக்கு யோகப்பலன்களை வழங்கி வந்த சனி பகவான் 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு நான்காம் வீடான, மாதுர் மற்றும் சுகஸ்தானமான, உங்கள் ராசியாதிபதி குருவின் மற்றுமொரு வீடான மீன ராசியில், குருவின் நட்சத்திரமான பூரட்டாதியிலும், சனி பகவானின் நட்சத்திரமான உத்திரட்டாதியிலும், புதனின் நட்சத்திரமான ரேவதியிலும் சஞ்சரிக்க இருக்கிறார்.

நான்காம் வீட்டில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலத்தை அர்த்தாஷ்டம சனியின் காலம் என்று சொல்வோம். அஷ்டம சனியாக சஞ்சரித்து வழங்கும் பலன்களில் ஐம்பது சதவிகிதப் பலன்களை இந்த அர்த்தாஷ்டம சனி வழங்குவார்.

உங்கள் ராசிநாதனுக்கு சனி பகவான் நட்பானவர் என்றாலும், அவர் கர்மக்காரகன் என்பதால் ஒரு நீதிபதிபோல் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ற பலன்களை பாரபட்சமின்றி நேர்மையாக வழங்கிடுவார். ஒவ்வொருவரின் கர்ம வினைக்கேற்ப, பூர்வ புண்ணியத்திற்கேற்ப பலன்களை வழங்கிடும் சனி பகவான், நான்காம் வீட்டில் சஞ்சரிக்கும் காலத்தில், வாழ்க்கையில் எண்ணற்ற இடையூறுகள், வேலைகளில் அலைக்கழிப்புகள், குடும்பத்தில் வீண் விரோதம், ஊர்விட்டு ஊர் செல்ல வேண்டிய நிலை. வசிக்கும் இடத்தை மாற்றம் செய்ய வேண்டிய சூழல். பெற்ற தாயின் உடல் நிலையில் பாதிப்பு. ஒரு சிலருக்கு தாயுடனும் தாய் வழி உறவுகளுடனும் விரோதம் ஏற்பட்டு அவர்களை விட்டு விலக வேண்டிய நிலை. வீடு, சொத்து, வாகனத் தால் தொல்லைகளும். உற்றார் உறவினர்களிடம் பகையும் ஏற்படுவதுடன், செய்துவரும் தொழிலிலும், பார்த்துவரும் உத்தியோகத்திலும் சங்கடங்கள், எதிரிகளால் தொல்லைகள், தொழிலில் நஷ்டம், பிரச்சனைகள், வீண் செலவுகள், என்று உண்டாக வாய்ப்புண்டு.

## சத்ரு ஜெய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

நான்காம் வீட்டில் சஞ்சரிக்கும் சனி பகவான், தன் மூன்றாம் பார்வையால் உங்கள் சத்ரு ஜெய ஸ்தானமான ஆறாம் இடத்தைப் பார்ப்பதால், இக்காலத்தில் மிகப்பெரிய நன்மைகளை நீங்கள் அடைவீர்கள்.

உங்களுக்கிருக்கும் மறைமுக எதிர்ப்புகள் இக்காலத்தில் விலக ஆரம்பிக்கும். விரோதிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து செல்லக்கூடிய நிலை ஏற்படும். அவர்களை மிகச்சுலபமாக எதிர்த்து வெற்றி அடைவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டிகள், பிரச்சனைகள் முடிவிற்கு வரும். உடல் நிலையில் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும். ஆரோக்கியம் சீராகும். குணமாகாமல் இருந்த நோயும் குணமாகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த வழக்குகள், பிரச்சனைகள் முடிவிற்கு வரும். கடன் தொல்லையால் அவதிப்பட்டு வந்த நிலை மாறும். தொழிலை விருத்தி செய்வதற்காக திட்டமிட்டு செயல்படுவீர்கள். வேலை இல்லாமல் இருப்பவர்கள் கடுமையான முயற்சிக்குப்பின் வேலை வாய்ப்பை அடைவீர்கள். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும் கிடைக்கலாம். எதிர்பாராத பணவரவு எங்கிருந்தாவது வரும். உங்கள் செல்வாக்கு உயரும் என்றாலும் களத்திர ஸ்தானமான ஏழாம் இடத்திற்கு ஆறாம் வீடு 12 ம் வீடு என்பதால், அங்கு சனியின் பார்வை பதிவதால் வாழ்க்கைத்துணைக்கும் உங்களுக்கும் ஏதேனும் ஒரு வகையில் பிரச்சனை, பாதிப்பு, பிரிவும்கூட இக்காலத்தில் ஏற்படலாம்.

## ஜீவன ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் ஏழாம் பார்வை உங்கள் ஜீவன ஸ்தானமான பத்தாம் வீட்டில் பதிவதால், நீங்கள் செய்து வரும் தொழிலில் அதிகபட்சமான கவனத்தை செலுத்த வேண்டியதாக இருக்கும். உங்கள் கவனக் குறைவாலும், அசட்டைத் தனத்தாலும் முக்கியமான காரியங்களில் உங்களுக்கு தோல்வி உண்டாகலாம். ஆமை முயல் கதைபோல் நீங்கள் அதிகபட்ச நம்பிக்கையுடனும், அலட்சியமாகவும் இருக்கின்றபோது அதுவே உங்களுக்கு எதிர்மறையான நிலையினை ஏற்படுத்தி விடும். வேலைச் செய்துவரும் இடத்திலும் கவனமாக இருக்க வேண்டும். நியாயமாக உங்களுக்கு வரவேண்டிய பதவி உயர்வுக்கூட இக்காலத்தில் தள்ளிப்போகலாம். அல்லது உங்கள் நிலையை ஒட்டி பதவி உயர்வு வேண்டாம் என்ற முடிவிற்கு நீங்களே வரலாம். செய்துவரும் தொழிலிலும் அதிகபட்ச முயற்சிகள் தேவைப்படும். உங்கள் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் பல வகைகளிலும் சோதனை உண்டாகலாம். அரசியல் வாதிகளின் எதிர்பார்ப்பு நம்பிக்கை எல்லாம் கானல் நீராகலாம். வருவாயில் தடை உண்டாகலாம், ஜீவனத் திற்கும் இக்காலத்தில் சிரமம் உண்டாகலாம். அதனால் மனச்சோர்வு, உடல் சோர்வு, டென்ஷன் என்ற நிலையும் உருவாகலாம் என்றாலும், உங்கள் சுய ஜாதகத்தின் அடிப்படையில் இப்பலன்களில் மாறுதல் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

## ஜென்ம ராசிக்கு சனிப்பார்வை

சனி பகவானின் பத்தாம் பார்வை உங்கள் ஜென்ம ராசியில் பதிவதால், உடல் நிலையிலோ அல்லது உங்கள் மன நிலையிலோ ஏதேனும் ஒரு சங்கடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எடுத்த

வேலைகளை உடனுக்குடன் முடித்து வந்த உங்களுக்கு அதில் தடையும் தாமதமும் ஏற்படலாம். இருந்த இடத்தில் இருந்து சாதித்துவந்த நிலைமாறி ஒவ்வொன்றுக்கும் அலைச்சல் அதிகரிக்கும். வேலைபளுவும்கூடும் உறவினர்களிடம் பகையும், வேலையின் காரணமாக வெளியூருக்கு அடிக்கடிச் சென்று வரக்கூடிய நிலையும், அல்லது வெளியூரில் சென்று வசித்திட வேண்டிய சூழலும், குடும்பத்தை விட்டுப் பிரிந்து வாழ வேண்டிய நிலையும் ஒரு சிலருக்கு உருவாகும். உடல் நிலையில் பாதிப்பு உண்டாகி உங்களை அச்சுறுத்தக்கூடும். மருத்துவச்செலவும் சிலருக்கு அதிகரிக்கும். எதையோ இழந்துவிட்டது போல் மனம் வேதனைப்படும். தொழிலில் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு சூழ்நிலைகள் உருவாகும் என்பதால் எடுத்துக்கொண்ட வேலைகளை உங்களால் நிறைவேற்ற முடியாமல் போகும்.

சனிபகவான் ஒரு வீட்டில் இரண்டரை ஆண்டுகள் சஞ்சாரம் செய்தாலும், தொடர்ந்து அவர் இரண்டரை ஆண்டுகளும் ஒரே நிலையில் சஞ்சரிப்பதில்லை. அவர் சஞ்சரிக்கும் இடத்தில் ஆண்டிற்கு நான்கு மாதங்கள் வக்கிரகதி அடைவார் என்பதால், அக்காலத்தில் மேலே உள்ள பலன்கள் மாறுபடும். நீங்கள் சந்தித்து வந்த நெருக்கடிகள் நீங்கும். நன்மைகள் உண்டாகும். அத்துடன் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகளாலும் மேலே கூறிய பலன்களில் மாறுபடு உண்டாகும்.

## அதிர்ஷ்டம் தரும் அஸ்தமன காலம்

சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானால் உங்களுடைய சுகத்திற்கு கேடு உண்டாகும், வியாபாரம், தொழில், உத்தியோகத்தில் நெருக்கடிகள் தோன்றும், எந்த ஒன்றிலும் ஆர்வமில்லாத நிலை உருவாகும் என்றாலும், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி பகவான் அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் அவரால் ஏற்பட்ட நெருக்கடிகள், பாதிப்புகள், பிரச்சனைகள் எல்லாம் விலகும். எடுத்த வேலைகள் வெற்றியாகும்.

## வளம்தரும் வக்கிர சனி

சனி பகவானின் சஞ்சார காலத்தில் அவர் வக்கிரமடையும் காலம் ஒவ்வொரு ஜாதகருக்கும் மிக முக்கியமான காலமாகும். அக்காலங்களில் பாதகமான பலன்களை சந்தித்து வருபவர் களுக்கு வக்கிர சனியால் நன்மைகள் அதிகரிக்கும். தாங்கள் சந்தித்து வந்த நெருக்கடிகள் குறைய ஆரம்பிக்கும். அந்த நிலையில், 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், 28.7.2027 முதல் 13.12.2027 வரையிலும் சனி பகவான் வக்கிர கதியினை அடைகிறார். இக்காலத்தில் உங்கள் பிரச்சனைகள் ஒவ்வொன்றாக விலக ஆரம்பிக்கும். உடல் நிலையில் முன்னேற்றம் தோன்றும். எதிரிகளை வெல்லும் ஆற்றல் உண்டாகும். தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில்

ஏற்பட்ட பிரச்சனைகள் முடிவிற்குவரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் நீங்கும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய்வழியில் உண்டான பகை மாறும். கல்வியில் கவனம் செல்லும். மனநிலையில் தெளிவு இருக்கும். புதிய வீடு, வாகனம் வாங்குவீர்கள். தடைபட்டிருந்த வேலைகள் நடைபெற ஆரம்பிக்கும். முன்பிருந்த சோதனை கள் மாறி உங்கள் முயற்சிக்கேற்ற பலன் கிடைக்க ஆரம்பிக்கும். சிந்தித்து செயல்படும் செயல்களில் வெற்றி உண்டாகும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சனைகள் ஒருவழியாக விலகும். அனைத்திலும் யோகமான நிலை ஏற்படும்.

## சுக ஸ்தான சனிக்கு குருவின் சுபத்துவம்

கிரகங்களில் மங்கள காரகனான குரு பகவான் பார்க்கும் இடங்கள் சுபிட்சமாகும் என்பது பொதுவிதி! சனி பகவான் தற்போது சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதி குரு பகவான் ஆவார்! உங்கள் ராசியாதிபதியும் சுகாதிபதியும் குரு பகவானே ஆவார்! அதன் காரணமாகவே உங்களுக்கென்று எப்பொழுதும் ஒரு தனி செல்வாக்கு இருக்கும். சமூகத்தில் அந்தஸ்தும் மரியாதையும் இருக்கும். நீங்கள் சொல்கின்ற வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கும். நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கு ஒரு கூட்டம் இருக்கும். உங்களுடைய ஆலோசனைகளுக்காக ஒரு சிலர் காத்துக் கொண்டிருப்பார்கள். உங்கள் ராசியாதிபதியான குரு பகவான், 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானைப் பார்ப்பதால், சனி பகவானாலும் அவருடைய பார்வைகளாலும் உங்களுக்கேற்பட்ட நெருக்கடிகள் நீங்கும். உங்கள் செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும். குடும்பத்தில் சுபிட்சமான நிலை இருக்கும். பட்டம் பதவி உங்களைத் தேடி வரும். வேலைப் பார்க்கும் இடத்தில் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும். அரசியல்வாதிகள் செல்வாக்கு உயரும். புதிய இடம் வீடு வாகனம் வாங்கும் கனவு நனவாகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையுடன் இணக்கமான நிலை உண்டாகும்.

## பரிகாரம்

சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் தேய்த்து உடல்குளித்து வாருங்கள். சனி பகவானுக்கு சனிக்கிழமைதோறும் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபட்டு வாருங்கள். சனி திசை நடைபெற்று வருபவர்களும், சனி பகவானால் உண்டாகும் பாதகத்தை கட்டுப்படுத்த நினைப்பவர்களும் நீலக்கல் பதித்த மோதிரம் அணிவது நன்மையை அளிக்கும். வசதி வாய்ப்பில்லாத வயோதிகர் களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் உங்களால் முடிந்த உதவிகளைச் செய்து வருவதுடன், பைரவரை தொடர்ந்து வழிபட்டு வருவதால் உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு நீங்கும்.



# மகரம்

**உத்திராடம் 2, 3, 4 ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும்; ஜென்ம ராசி எதுவென்று தெரியாத தை மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; போ, ஜ, ஜி, ஜீ, ஜெ, ஜோ, க, கா, கி ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்***

ராசியின் அதிபதி: சனி

நட்சத்திர அதிபதிகள்: சூரியன், சந்திரன், செவ்வாய்

பாதகாதிபதி: செவ்வாய்

மாரகாதிபதிகள்: சனி, சந்திரன்

## சகாயம்தரும் சகாய சனி

வாழ்வில் எப்படியாவது முன்னேற்றமடைய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் வாழ்ந்துவரும் மகர ராசியினரான உங்களுக்கு, கர்மக்காரகனும், ஆயுள் காரகனும், ஜீவனாதிபதியுமான சனிபகவானே ராசிநாதனாவார். கால புருஷ தத்துவத்தின் பத்தாமிடம் உங்கள் ராசி என்பதால் செய்துவரும் தொழிலில் உங்களுக்கு அதிகபட்ச அக்கறை இருக்கும். மற்றவர்கள் முடியாது என்று கை விட்ட தொழில்களையும் நீங்கள் எடுத்து ஆதாயம் அடைவீர்கள். போட்டியாளர்களை வெல்லக்கூடிய விவேகமும் செயல்பாடும் இயல்பாகவே உங்களுக்கு இருக்கும். இருந்தாலும், நீதி நெறி தவறாதவரான சனி பகவான் கோச்சார ரீதியாக அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை வழங்கிடக் கூடியவர். அந்த வகையில் உங்கள் ராசிக்கு தன, குடும்ப வாக்கு ஸ்தானமான இரண்டாம் இடத்தில் ஏழரை சனியின் கடைசி பகுதியாய், பாத சனியாய் கடந்த இரண்டரை ஆண்டுகாலம் சஞ்சரித்து வந்த சனி பகவான் பல வழிகளிலும் உங்களுக்கு சங்கடத்தையே ஏற்படுத்தி

வந்தார். ஒவ்வொன்றிலும் போராட்டத்தை சந்திக்க வேண்டிய நிலையினை உண்டாக்கி வந்தார். உடல்நிலையிலும் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். நிறைய செலவுகள் செய்தபிறகே சில வேலைகளை உங்களால் முடித்திருக்க முடியும். அலைச்சலும் அதிகரித்திருக்கும். நீங்கள் தொட்ட வேலைகளில் எல்லாம் எதாகிலும் ஒரு பிரச்சனை உண்டாகி இருக்கும். விரயத்திற்கு மேல் விரயமும் ஏற்பட்டிருக்கும். குடும்பத்திலும் பிரச்சனைகள் உண்டாகி இருக்கும். சிலருக்கு தொழில் காரணமாக, உத்தியோகம் காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கும். நாளுக்குநாள் ஏதேனும் பிரச்சனைகளை சந்தித்து அவற்றுடன் போராடி வந்திருப்பீர்கள். இந்த நேரத்தில் உங்களுக்கு ஆதரவாக இருந்தவர்களும் ஒரு சிலர் உங்களைவிட்டு விலகி இருப்பார்கள். உங்கள் வார்த்தைகளில் கோபம் வெளிப்பட்டிருக்கும் அவசரத்தனம் உங்கள் நிலையை மாற்றி இருக்கும்.

கடந்த இரண்டரை வருடங்களில் உங்களுக்கு நிறையவே நெருக்கடிகளையும், எதிர்மறை யான பலன்களையும் வழங்கி வந்த சனி பகவான், 6.3.2026 முதல் உங்கள் ராசிக்கு மூன்றாம் வீடான மீன ராசியில், தைரிய சகோதர ஸ்தானத்தில் சகாய சனியாக சஞ்சரிக்கப்போகிறார். இக்காலத்தில் ஏழரை சனியின் பிடியில் இருந்து நீங்கள் முழுமையாக விடுபடுகிறீர்கள். ஏழரை ஆண்டு கால நெருக்கடிகள், போராட்டங்கள் எல்லாம் உங்களைவிட்டு விலகப்போகிறது.

கோச்சார ரீதியாக சனி பகவான் மூன்று, ஆறு, ஒன்பது, பதினொன்றாம் இடங்களில் சஞ்சரிக்கும் காலங்களில் ஜாதகருக்கு அபரிமிதமான பலன்களை வழங்குவார் என்பது பொதுவிதி.

கடந்த ஏழரை ஆண்டுகளில் நீங்கள் அடைந்துவந்த சங்கடங்களிலிருந்து இப்போது விடுதலைக் கிடைக்கும். இக்காலம் உங்களுக்கு மிகப்பெரிய யோக காலமாக இருக்கும். 6.3.2026 முதல் பல்வேறு நன்மைகளை சனி பகவான் உங்களுக்கு வழங்கப் போகிறார். முதலில் உங்கள் பொருளாதார நிலை உயரும். செல்வாக்கும் அந்தஸ்தும் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் யாவற்றிலும் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாகும். செய்துவரும் தொழிலும் இக்காலத்தில் சிறப்படையும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் நீங்கி, முன்னேற்ற மடையும். வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த வேலைக்கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும் எதிர்பார்த்த இடமாற்றமும் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் செழிப்பும் உண்டாகும். உங்களுக்குத் தொல்லைக் கொடுத்துவந்த எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகிச்செல்வார்கள். அவர்களை அடக்கி வெற்றி கொள்ளும் ஆற்றலும் உங்களுக்கு உண்டாகும். வீட்டில் சுப காரியங்கள் நடந்து அதற்காக செலவழிக்க நேரும். ஒரு சிலருக்கு பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கம் நீங்கி கைக்கு வந்து சேரும். பிள்ளைகளின் முன்னேற்றம் உங்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும். சகோதர வகையில்

ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் விலகி ஒற்றுமை உண்டாகும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கையில் எடுத்த வேலைகளை நடத்தி வெற்றிபெறக்கூடிய சக்தி உண்டாகும். தொழிலில் முன்னேற்றமும் லாபமும் உண்டாகும். பணியாளர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பாக இருப்பார்கள். இக்காலத்தில் உங்களுக்கு வெற்றிக்குமேல் வெற்றிகளை சனி பகவான் வழங்குவார். இவையெல்லாம் மகர ராசியினரான உங்களுக்குரிய பொதுப் பலன்களாகும் சுய ஜாதகம் பலம் பெற்றவர்களுக்கும், நட்பான தசா புத்தி நடப்பவர்களுக்கும், போன ஜென்மங்களில் புண்ணியம் செய்தவர்களுக்கும் கர்ம வினைகளின் காரணமாக இப்பலன்கள் பன்மடங்கு அதிகரிக்கும்.

உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், அங்கிருந்து தனது 3, 7, 10 ம் பார்வைகளால் உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமான 5 ம் இடத்தையும், பாக்ய ஸ்தானமான 9 ம் இடத்தையும், விரய ஸ்தானமான 12 ம் இடத்தையும் பார்வையிட இருக்கிறார். இதனால், பூர்வ புண்ணிய புத்திர ஸ்தானமும், பித்ரு சகாய ஸ்தானமும், விரய ஸ்தானமும் சனி பகவானின் பார்வையில் சிக்குகிறது.

## பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் மூன்றாம் பார்வை உங்கள் பூர்வ புண்ணிய புத்திர ஸ்தானத்தில் பதிவதால், புத்திர புத்திரர்களால் ஏதேனும் ஒரு வகையில் நெருக்கடிகளை நீங்கள் சந்திக்கநேரும். அவர்களுடைய நடவடிக்கைகள் உங்கள் மனதிற்கு வேதனையை அளிக்கும். உங்களுக்கும் அவர்களுக்கும் ஒரு இடைவெளியும் ஏற்படும். அவர்களின் போக்கு உங்களைப் பாதிக்கும். குடும்பத்தில் பிரச்சனைகளும் உருவாகலாம். பூர்வீக சொத்துகளில் திடீரென பிரச்சனைகள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு புதிய காதல் ஏற்படலாம். அதனால் கணவன் மனைவிக்குள் சச்சரவுகள் தோன்றலாம். குழப்பமான நிலை உண்டாகி மனம் பெரிதும் அவதியடைய வேண்டிய நிலையும் உண்டாகும் என்பதால் இக்காலத்தில் ஒவ்வொன்றிலும் நிதானம் மிக மிக முக்கியம்.

## பாக்ய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் ஏழாம் பார்வை, உங்கள் பாக்ய, பித்ரு, காரிய சகாய ஸ்தானத்தில் பதிவதால் தந்தையின் உடல்நிலையில் எதிர்பாராத சங்கடம் தோன்றும். தந்தைவழி உறவுகளுடன் மோதல்நிலை உண்டாகும். திருமணம் முடிந்தவர்களுக்கு வேறு நட்புகள் உண்டாகும். அதனால் கணவன் மனைவியரிடையே மோதல், கருத்து வேறுபாடு என்று உண்டாகும். சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டிய நிலைக்கும் ஆளாவர். தீயோர் சேர்க்கையால் தவறான பாதையில் செல்லநேரும். மனதில் ஏதேனும் ஒரு குழப்பம் தோன்றி மன நிம்மதிக்காக ஆலயங்களுக்கு சென்று வருவீர்கள். வருமானத்தில் நிறைவு

இல்லாமல் இருக்கும் இடத்தை விற்று சரிசெய்ய வேண்டிய நிலையும் சிலருக்கு ஏற்படும். பணக்கஷ்டம், தீய பழக்க வழக்கங்கள் என உண்டாவதுடன் வெளியூர் வாசமும் சிலருக்கு உண்டாகும். நல்லப்பெயருடன் வாழ்ந்தவர்களும் அவப்பெயருக்கு ஆளாக நேரலாம். எனவே, பின் விளைவுகளை எண்ணிப் பார்த்து சிந்தித்து செயல்படுவது இக்காலத்தில் நன்மையாகும்.

## விரய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் பத்தாம் பார்வை, உங்கள் விரய, மோட்ச ஸ்தானத்தில் பதிவதால் பல வழிகளிலும் செலவுகள் அதிகரிக்கும். சேமித்து வைத்த பணம் விரயம் ஆகும். எளிதாக நடந்து முடிய வேண்டிய வேலையில்கூட இழுபறியும் செலவும் உண்டாகும். அவசர வேலைக்காக கடன் வாங்க நேரும். வீண் அலைச்சல், காரியம் கை கூடாமல் மன உளைச்சல், எதிரிகளால் இடையூறு, மதிப்பு கௌரவத்திற்கு பங்கம் என்ற நிலை உண்டாகும். எதிர்பாலினரால் சிலருக்கு அவமரியாதை ஏற்படும். தூக்கமின்மையும், மனதில் சந்தோஷமற்ற நிலையும், பொன் பொருட்களை விற்க வேண்டிய நிலையும் உண்டாகும் என்பதால் இக்காலத்தில் ஒவ்வொரு வேலையிலும் சிந்தித்து செயல்பட வேண்டும். இவையெல்லாம் மூன்றாம் வீட்டில் பிரவேசிக்கும் சனி பகவானின் பார்வைகளால் நிகழக்கூடிய பலன்களாகும்.

## அதிர்ஷ்டம் தருவாரா அஸ்தமன சனி?

மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் உங்களுக்கு நன்மைகளை வழங்கின ாலும், அவருடைய மூன்று பார்வைகளும் இக்காலத்தில் நெருக்கடிகளை உண்டாக்கிட இருப்பதால், உங்கள் வேலைகளில் தடைகள் தாமதங்கள் போராட்டம் என்று நீங்கள் சந்திக்க வேண்டியதாக இருக்கும். இந்த நிலையில், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும் 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி பகவான் அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் உங்களுக்கேற்பட்ட நெருக்கடிகள் விலக ஆரம்பிக்கும். நினைத்த வேலைகளை நினைத்தபடி நடத்திக்கொள்ள முடியும். வியாபாரம் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். குடும்பத்தில் நிம்மதியான நிலை இருக்கும். ஆரோக்கியம் சீராகும். வரவு அதிகரிக்கும். பிள்ளைகளுக்கும் உங்களுக்குமான இடைவெளி விலகும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட சட்ட சிக்கல்கள் முடிவிற்குவரும். பெரியோரின் ஆதரவு கிடைக்கும்.

## வளம் தருவாரா வக்ர சனி?

உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான், 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், 28.7. 2027 முதல் 13.12.2027 வரையிலும் வக்கிர கதியினை அடைவதால், இக்காலங்களில்

சனிபகவானின் பார்வைகளால் உண்டாகும் பாதிப்பான பலன்கள் குறைய ஆரம்பிக்கும்.

உங்கள் சுய ஜாதகத்தின் அடிப்படையில், தசா புத்தியின் அடிப்படையில், பிற கிரகங்களின் சஞ்சார நிலைக்கேற்ப பலன்கள் நடைபெறும் என்பதால், இக்காலம் உங்களுக்கு நன்மையான காலமாகவே இருக்கும். எந்த ஒரு பிரச்சனையும் இக்காலத்தில் உங்களை எதுவும் செய்யாது. குடும்பத்திலும் ஒரு நிம்மதியான நிலை இருக்கும். சுப காரியங்கள் நடந்தேறும். தொழில் சிறப்பாகும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சனைகள் விலகும். நல்லவர்கள் நட்பு கிடைத்து அதனால் முன்னேற்றம் அடைவீர்கள். தந்தையின் உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும். பிள்ளைகளும் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். புதிய வாகனம், வீடு என்று வாங்குவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். உங்கள் நிலையில் முன்னேற் றம் ஏற்படும்.

## சகாய சனிக்கு குருவின் சுபத்துவம்

கிரகங்களில் சுப கிரகமான குரு பகவான் பார்க்கும் இடங்கள் சுபிட்சமாகும் என்பது பொது விதி! சனிபகவான் தற்போது சஞ்சரிக்கும் மீன ராசியின் அதிபதி குரு பகவான்! அவர் உங்கள் ராசிக்கு சகாய ஸ்தானாதிபதியும் ஆவார். மீன ராசியில் உங்கள் ராசிநாதன் சனி பகவானும் நட்பாகவே சஞ்சரிக்கிறார்! இந்நிலையில் 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் குரு பகவான் உங்கள் ராசியையும், மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானையும் பார்ப்பதால் இக்காலங்கள் உங்களுக்கு மிகப்பெரிய யோகமான காலமாக இருக்கும். பொதுவாக குரு பகவானின் பார்வை ஒருவரின் ராசிக்கு கிடைக்கும்போது குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். புதிய சொத்து சேரும். திருமண வயதினருக்கு திருமணம் நடந்தேறும். குழந்தை பாக்யத்திற்காக காத்திருந்தவர்களின் ஏக்கம் தீரும். அரசியல்வாதிகளுக்கு பட்டம் பதவி என்று கிடைக்கும். படிப்பில் முன்னேற்றம், வேலை வாய்ப்பு, செல்வம், செல்வாக்கு என்று வாழும் நிலை உருவாகும் என்பதால் இக்காலங்கள் உங்களுக்கு மிகப்பெரிய யோகமான காலமாக இருக்கும். சனி பகவானின் பார்வைகளால் ஏற்படுகின்ற சங்கடங்கள் உங்களை நெருங்காமல் போகும். நினைத்த வேலைகளை நினை த்தபடி நடத்திக் கொண்டு வாழ்வில் உச்சத்தை எட்ட முடியும்.

## பரிகாரம்

ஒரு முறை திருநள்ளாறு சென்று நள தீர்த்தத்தில் நீராடி, தர்ப்பாரண்யேசுவரருக்கு அர்ச்சனை செய்துவிட்டு, சனீச்வரனுக்கு நல்லெண்ணை தானம் செய்து வழிபட்டுவர சங்கடங்கள் நீங்கும். வயதானவர்களுக்கு உணவும் உடையும் வழங்கிவர நன்மைகள் அதிகரிக்கும்.



# கும்பம்

**அவிட்டம் 3, 4 ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும்; ஜென்ம ராசி எதுவென்று தெரியாத மாசி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; கு, கெ, கோ, ஸ, ஸி, ஸீ, ஸே, ஸோ, த ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: சனி

நட்சத்திர அதிபதிகள்: செவ்வாய், ராகு, குரு

பாதகாதிபதி: சுக்கிரன்

மாரகாதிபதி: செவ்வாய், புதன்

## கும்ப ராசிக்கு பாத சனி

நினைப்பதை சாதிப்பதில் உறுதியாக இருக்கும் கும்ப ராசி நண்பர்களே, கடந்த இரண்டரை வருடமாக உங்கள் ராசியான கும்ப ராசிக்குள் ஜென்ம சனியாக சஞ்சரித்து வந்த சனி பகவான், 6.3.2026 அன்று உங்கள் ராசிக்கு இரண்டாம் வீடான மீன ராசியில் பாத சனியாக சஞ்சரிக்கப்போகிறார்.

இதுவரையில் உங்கள் ராசிக்குள் ஜென்ம சனியாக சஞ்சரித்து வந்தவர், உங்கள் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தி இருப்பார். பணத்தட்டுப்பாட்டை அதிகரித்திருப்பார். எந்த வேலையையும் எடுத்தோம் முடித்தோம் என்று முடிக்க முடியாத அளவிற்கு தடைகளையும், பிரச்சனைகளையும் தந்திருப்பார். உடலில் நோய்த்தொல்லையை அதிகரித்து சிரமத்திற்கு ஆளாக்கி இருப்பார். நல்ல முறையில் பழகி வந்தவர்களையும் உங்களைவிட்டு விலக வைத்திருப்பார். கணவன் மனைவிக்குள்ளும் ஒற்றுமையில்லா நிலையை உருவாக்கி இருப்பார். செய்துவரும் தொழிலில் பாதிப்பையும், அதனால் வருமானக் குறைவையும் ஏற்படுத்தி இருப்பார்.

கூட்டாளிகள் பிரிந்து சென்று தனித்து செயல்பட ஆரம்பித்து இருப்பார்கள். அதனால் உங்கள் மனதில் இனம் புரியாத பயம் உண்டாகியிருக்கும். அளவிற்கு மீறிய சங்கடங்களை அனுபவித்திருப்பீர்கள். நண்பர்கள் உறவினர்கள் என்று அனைவரும் பகைவர்களாக மாறி இருப்பார்கள். குடும்பத்திலும் நிம்மதியற்ற நிலை உருவாகி இருக்கும். மனதில் தேவையற்ற பயமும் சேர்ந்திருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடையும் மந்த நிலையும் ஏற்பட்டிருக்கும். பொன் பொருட்களில் குறைவு, சேமிப்பில் சரிவு என்று ஜென்ம சனியானது உங்களை எழ முடியாத அளவிற்கு கட்டிப்போட்டிருக்கும்.

சனி பகவான் உங்கள் ராசிக்கும், பன்னிரண்டாம் இடமான விரய ஸ்தானத்திற்கும் அதிபதியாவார் என்றாலும், அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவர் கர்ம வினைகளுக்கேற்ப வழங்கிடக் கூடியவர்.

கடந்த இரண்டரை வருடங்களில் சனி பகவான் உங்களுக்கு பல வழிகளிலும் சங்கடங்களை யும், பிரச்சனைகளையும், நிம்மதியற்ற நிலையையுமே உருவாக்கி வந்தார். இந்த நிலையில் 6-3-2026 முதல் மீன ராசியில் பாத சனியாக சஞ்சரிக்கப் போகும் சனி பகவான் உங்களுக்கு எந்தவிதமான பலன்களை வழங்கிடப் போகிறார்?

உங்கள் ராசிக்கு இரண்டாம் இடம் என்பது தனம், குடும்பம், வாக்கு, நேத்திர ஸ்தானமாகும். இங்கு சஞ்சரிக்கும் சனி பகவான் இவற்றில் எல்லாம் சங்கடங்களை ஏற்படுத்துவார். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாத அளவிற்கு உங்கள் நிலையில் மாற்றத்தை உண்டாக்குவார். வார்த்தைகளால் சச்சரவுகளும் பிரச்சனைகளும் உண்டாகும். பணவரவில் தடைகளும் தாமதமும் ஏற்படும். குடும்பத்திற்குள் குழப்பமும் பிரச்சனைகளும் தலைதூக்கும். ஏதாகிலும் ஒரு குழப்பம் மனதிற்குள் இருந்து கொண்டே இருக்கும். ஒரு சிலருக்கு தொட்டதெல்லாம் சங்கடம், எடுத்ததெல்லாம் பிரச்சனை என்ற நிலை ஏற்படும். ஒரு சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் நேரும். அஜாக்கிரதையின் காரணமாக பொருட்கள் களவுபோகும். பொருளாதார இழப்பு உண்டாகும். உங்கள் செல்வாக்கில் மாறுதல் தோன்றும். வாக்குத்தவற நேரும். வருமானம் தடைபடும். எதிலும் நாட்டமற்ற நிலை உருவாகும். பெற்றோர் உறவினர்களின் வெறுப்புக்கும் பகைக்கும் ஆளாகநேரும். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் மனதில் குடிகொள்ளும். உடல்நிலையும் பாதிக்கப்பட்டு சுகமற்ற நிலை உருவாகக்கூடும்.

உங்கள் ராசிக்கு இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் அங்கிருந்து தன்னுடைய மூன்று, ஏழு, பத்தாம் பார்வைகளால் உங்களுடைய சுக ஸ்தானத்தையும், ஆயுள் ஸ்தானத்தையும், லாப ஸ்தானத்தையும் பார்வையிடுகிறார்.

பொதுவாக சனி பகவானின் பார்வை மிகக்கொடியது என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. அவர் பார்க்கும் இடங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துவார் என்பது விதி என்றா லும், மூன்று, ஆறு பதினொன்றாம் இடங்களை அவர் பார்க்கும்போது அந்த இடங்களுக்கு யோகமான பலன்களையே அவர் உண்டாக்குவார்.

## சுக ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவான் மீன ராசியில் சஞ்சரிக்கும் இக்காலத்தில் அவருடைய மூன்றாம் பார்வை உங்கள் ராசிக்கு நான்காம் இடமான, சுகம் மற்றும் மாதுரர் ஸ்தானத்தில் பதிவதால் பெற்ற தாய் இருப்பின் அவருடைய ஆரோக்கியத்திற்கு சங்கடம் உண்டாகும். அல்லது தாயுடன் பகைமை ஏற்படும். தாய்வழி உறவினர்களுக்கும் உங்களுக்கும் பிரச்சனைகள் அதிகரிக்கும். வீடு சொத்து வாகனம் இருந்தால் அவற்றால் தொல்லைகள் உண்டாகும். அலைச்சல், திரிச்சல், நேரத்திற்கு உணவு உண்ண முடியாமல் உறங்க முடியாமல் போகும். எடுத்த வேலைகளை முடிக்க முடியாமல் சங்கடம் அதிகரிக்கும். உழைப்பு கூடும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். மொத்தத்தில் நிம்மதி கெடும் சுகத்திற்கு கேடு உண்டாகும் என்று சொல்லலாம்.

## ஆயுள் ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனிபகவானின் ஏழாம் பார்வை, உங்கள் ஆயுள் ஸ்தானமான எட்டாம் இடத்தில் பதிவதால் பல்வேறு இடர்பாடுகளை இக்காலத்தில் சந்திக்க வேண்டியதாக இருக்கும். உடல்நிலையில் எதிர்பாராத பாதிப்புகள் தோன்றும். நீண்ட காலமாக உங்களைப் பழிவாங்குவதற்காக காத்திருந்த எதிரிகள் உங்கள் ரகசியங்களைக் கண்டறிந்து அவமானத்திற்கு ஆளாக்குவார்கள். அதனால் உங்கள் செல்வாக்கு குன்றும். குடும்பத்தில் கஷ்டம், தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு, உறவினர்களிடம் மனக்கசப்பு, முயற்சிகளில் தடை, ஊர்விட்டு ஊர்செல்லும் நிலை என்று உருவாகும். பெண்களுக்கு எட்டாம் இடம் என்பது மாங்கல்ய ஸ்தானம் என்பதால் இக்காலத்தில் கும்ப ராசிப் பெண்களுடைய வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்திற்கு கேடு உண்டாகும். சிலருக்கு மாங்கல்யத்திற்கும் சோதனை ஏற்படும். எட்டாம் இடம் என்பது பாக்ய ஸ்தானமான ஒன்பதாம் இடத்திற்கு விரய ஸ்தானம் என்பதால் தந்தைக்கு சோதனை, பாதகம் என்ற நிலையும் இக்காலத்தில் உண்டாகும். பெரிய மனிதர்களுடன் மனக்கசப்பு ஏற்படும். ஒரு சிலருக்கு வேறு பெண்களுடன் தொடர்பு, நெருங்கிய உறவினர்களின் பிரிவு என்ற நிலை உருவாகும். சமூகத்தினரின் அவமதிப்பிற்கும் ஆளாகநேரும். தொழிலில் சிரமம் உண்டாகும்.

## லாப ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் பத்தாம் பார்வை, உங்கள் லாப ஸ்தானமான பதினொன்றாம் வீட்டில் பதிவதால், ஆயிரம் சோதனைகள் வந்தாலும் அதையெல்லாம் சமாளிக்கும் சக்தி உண்டாகும்.

எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அதிர்ஷ்டம் கை கொடுக்கும். பலவகையிலும் வருவாய் வரக்கூடும். எதிர்பாலினரால் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். சந்தோஷம் கூடும். அரசு துறைகளால் நன்மை உண்டாகும். வீட்டில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் இருக்கும். தொழிலில் மாற்றம், இடமாற்றம் போன்றவை நிகழக்கூடும். ஒரு சிலருக்கு புதிய சொத்து சேரும். திருமண வாழ்க்கையில் முறிவு ஏற்பட்டவர்களுக்கு மறுமணம் நடைபெறும். வரவேண்டிய பணம்வரும். நெருக்கடிகள் நீங்கும்.

சனி பகவான் ஒரு வீட்டில் இரண்டரை ஆண்டுகள் சஞ்சாரம் செய்தாலும் தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளும் ஒரே நிலையில் அவர் சஞ்சரிப்பதில்லை. சஞ்சரிக்கும் இடத்தில் வருடத்திற்கு ஒரு மாதம் அஸ்தமனமும், நான்கு மாதங்கள் வக்கிர கதியையும் அடைவார். அக்காலத்தில் மேலே சொன்ன பலன்கள் மாறுபடும். அத்துடன் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகளாலும் பலன்கள் மாறுபடும். தீமைகள் குறைந்து நன்மைகள் அதிகரிக்கும். அதே போல், பூர்வ புண்ணிய பலமுடையவர்களுக்கு, யோகமான திசாபுத்தி நடப்பவர்களுக்கு பெருமளவில் பாதிப்புகள் ஏற்படாது.

## அதிர்ஷ்டம் தருவாரா அஸ்தமன சனி

மீன ராசியில் பாத சனியாக சஞ்சரிக்கும் சனி பகவான், ஏழரை சனிக்காலத்தின் சங்கடங்களை சஞ்சார ரீதியாகவும், சுகம் மற்றும் அஷ்டம ஸ்தானங்களைப் பார்ப்பதாலும் உங்களுக்கு வழங்கிட இருப்பதால் உங்கள் வாழ்க்கையில் போராட்டமான நிலை இருக்கும் என்றாலும், 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் சனி பகவான் அஸ்தமனம் அடைவதால் இக்காலங்களில் உங்களுக்கேற்பட்ட நெருக்கடிகள் பிரச்சனைகள் அவமானங்கள் சங்கடங்கள் எல்லாம் விலகும். வியாபாரம் தொழில் முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் நிம்மதியான நிலை இருக்கும். மனதில் ஏற்பட்ட குழப்பம், உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு விலகும். கையில் பணம் புரளும்.

## வளம் தருவாரா வக்ர சனி?

மீன ராசியில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலத்தில், 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், 28.7.2027 முதல் 13.12.2027 வரையிலும் வக்கிர கதியினை அடைகிறார். இக்காலத்தில் பாத சனியின் பாதகப்பலன்கள் உங்களை நெருங்காமல் போகும்.

உடல்நிலை சீராகும். மனதில் ஏற்பட்ட பிரச்சனைகள் விலகும். பண வரவு அதிகரிக்கும். எதிரிகள் உங்களைக் கண்டு அஞ்சுவார்கள். எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைவீர்கள். ஆரோக்கியம் சீராகும். தாயின் உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும். தாய் வழி உறவுகளுடன் இருந்த பகை அகலும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை அதிகரிக்கும்.

குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவியிடையே தோன்றிய பிரச்சனைகள் முடிவிற்கு வரும். தடைபட்டிருந்த வேலைகளை நடத்தி முடிக்க முடியும். புதிய முயற்சிகள் வெற்றியாகும்.

## பாத சனிக்கு குருவின் சுபத்துவம்

சனி பார்க்க சர்வமும் நாசம், குரு பார்க்க கோடி புண்ணியம் என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர். கிரகங்களில் சுப கிரகமான குரு பகவான் பார்க்கும் இடங்கள் எப்போதும் சுபிட்சமாகும் என்பது பொது விதி. அதேபோல் அசுப கிரகங்களை அவர் பார்த்தாலும் அந்த கிரகங்களுக்கும் சுபத்துவம் ஏற்படும் என்பதும் பொது விதி. அந்த நிலையில் தற்போது மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானை அந்த ராசிநாதனான குரு பகவான் பார்க்கின்ற காலங்கள் என்பது உங்களுக்கு யோக காலமாக மாறும். 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் குரு பகவான் மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானைப் பார்ப்பதால் இக்காலங்கள் உங்களுக்கு மிகப் பெரிய யோக காலமாக இருக்கும். சனி பகவானால் ஏற்படும் பாதகமான பலன்கள் எதுவும் உங்களை நெருங்காமல் போகும். குடும்பத்தில் நிம்மதியான நிலை இருக்கும். கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். பணப்புழக்கம் அதிகரிக்கும். நிம்மதி சந்தோஷம் என்ற நிலை உருவாகும். புதிய வாகனம், நவீன பொருட்கள் என்று வாங்க முடியும். உங்கள் அந்தஸ்தும் செல்வாக்கும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். நினைத்த வேலைகளை நினைத்தபடி உங்களால் நடத்திக்கொள்ள முடியும். ஒரு சிலருக்கு புதிய சொத்துசேரும் புதிய வீட்டில் பால் காய்ச்சக்கூடிய நிலை ஏற்படும். பிள்ளைகள் நலனில் அக்கறை அதிகரிக்கும் என்பதால் பாத சனியின் பெரும்பாலான காலங்கள், அஸ்தமனம் மற்றும் வக்கிர நிலைகளாலும், குருப்பார்வையாலும் உங்களுக்கு யோகமான காலமாகவே இருக்கும். ஞான மோட்சக் காரகன் கேதுவும் 13.11.2026 முதல் சத்ரு ஜெய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போவதால் நோய் நொடி எதிர்ப்பு வம்பு வழக்கெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகும்.

## பரிகாரம்

விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கோலியனூரில், வாலியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தலம் உள்ளது. அம்மன் கோயிலின் நுழைவு வாயிலில் லிங்கத்தை வைத்து வாலி பூஜிப்பது போல் உள்ள இந்த சன்னதி பிரசித்திப்பெற்றதாகும். இங்கு ஒருமுறை சென்று வாலீஸ்வரரையும், பெரியநாயகி அம்மாவையும் வணங்கி அர்ச்சனை செய்துவர சங்கடங்கள் விலகும். நன்மைகள் அதிகரிக்கும். சனிபகவானுக்கு இத்தலம் விசேஷமான தலமாகும்.



# மீனம்

**பூரட்டாதி 4 ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும்; ஜென்ம ராசி எதுவென்று தெரியாத பங்குனி மாதத்தில் பிறந்தவர்களுக்கும்; தீ, து, ஏ, ச, த, தே, தோ, சா, சி, சீ ஆகிய எழுத்துகளைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இப்பலன்கள் பொருந்தும்.**

ராசியின் அதிபதி: குரு. நட்சத்திர அதிபதிகள்: குரு, சனி, புதன்

பாதகாதிபதி: புதன்

மாரகாதிபதிகள்: புதன், சனி

மீன ராசிக்கு ஜென்ம சனி

தெளிந்த சிந்தனையும், பிறரை வழிநடத்தும் ஆற்றலும், நினைத்ததை சாதிப்பதற்காக விடா முயற்சியுடன் செயல்படும் குணமும் கொண்ட மீன ராசியினரான உங்களுக்கு,

கடந்த இரண்டரை வருடங்களாக உங்கள் ராசிக்கு விரய சனியாக சஞ்சரித்து வந்த சனி பகவான், உங்களை வீண் விரயங்களுக்கு ஆளாக்கி இருப்பார். தரித்திரத்திற்கு உங்களை உள்ளாக்கி இருப்பார். மருத்துவ செலவுகளை அதிகரித்திருப்பார். முதலீடுகளில் இழப்புகளை ஏற்படுத்தி இருப்பார். காரியத்தில் தேக்கத்தையும், வருமானத்தில் குறைவையும் உருவாக்கி இருப்பார். உங்கள் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் பங்கத்தை உண்டாக்கி இருப்பார். குடும்பத்திலும் சண்டை, சச்சரவு, எதிலும் பற்றில்லாத, சாதகம் இல்லாத நிலையை ஏற்படுத்தி இருப்பார். உத்தியோகத்திலும் பிரச்சனைகள், வேலைபளு அதிகரிப்பு. தகுதிக்கும் திறமைக்கும் மதிப்பில்லாத நிலை. தகுதிக்கும் குறைவானவர்களிடம் அவமானம், மனைவி மக்களால் கவலை, வீண் அலைச்சல், மரண பயம் என்ற நிலையை உண்டாக்கி இருப்பார். ஆனாலும், நண்பர் உறவினர்கள் ஆதரவால் மனதிற்கு ஒருவித நிம்மதி உண்டாகி இருக்கும்.

தெய்வ வழிபாட்டால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதுபோல் சங்கடங்களிலிருந்து விடுபட்டு இருப்பீர்கள்.

இதற்கெல்லாம் காரணம் 12-ல் சஞ்சரிக்கும் சனி பகவான் பாதகம் செய்வார் என்பதுடன், அவர் பார்த்த குடும்ப ஸ்தானமும், பாக்ய ஸ்தானமும் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதுதான்.

இந்த நிலையில் கடந்த இரண்டரை வருடமாக 12 ம் வீட்டில் சஞ்சரித்து வந்த சனி பகவான் 6.3.2026 முதல் உங்கள் ஜென்ம ராசியில் ஜென்ம சனியாகவே சஞ்சரிக்கப் போகிறார். இது ஏழரை சனியின் மத்திய பகுதியாகும்.

பொதுவாக ஒவ்வொரு ராசிக்கும் ஏழரை சனியின் காலம் என்பது அவர்களின் கர்ம வினைகளுக்கேற்ற பலன்களை அடையக்கூடிய காலமாகும். இக்காலத்தில்தான் முற்பிறவியில் நாம் செய்த பாவ புண்ணியங்களுக்குரிய பலன்களும், இக்காலத்தில் செய்துவரும் பாவ புண்ணியங்களுக்குரிய பலன்களும் ஒட்டுமொத்தமாக நமக்கு பலன்களாக மாறும்.

ஜாதகருக்கு முதல் சுற்றின் காலம் சோதனைகளை அதிகரிக்கும், இரண்டாம் சுற்று யோகமாக இருக்கும் என்றாலும், அதிலும் நாம் செய்த புண்ணியங்களின் அளவுதான் கணக்காக இருக்குமே ஒழிய பொதுவான நிலையாக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

சரி 6.3.2026 முதல் ஜென்ம சனியாக சஞ்சரிக்கப் போகும் சனி பகவான் எத்தகைய பலன்களை வழங்கிடப் போகிறார் என்பதைப் பார்ப்போம்.

ஜென்ம ராசிக்குள் சனி பகவான் சஞ்சரிக்கும்போது உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார். வாகனப்பயணத்தில் விபத்துகளை சந்திக்கநேரும். உடல்நிலையில் பாதிப்பு உண்டாகும். தொழிலில் பாதிப்பு ஏற்படும். கடன் தொல்லையால் அவமானப்பட நேரும். பணத்தட்டுப்பாட்டை அதிகமாக்குவார். உடலில் நோய் தொல்லையை அதிகரித்து சிரமத்திற்கு ஆளாக்குவார். நல்லமுறையில் பழகி வந்தவர்களையும் உங்களைவிட்டு விலக வைப்பார். செய்துவரும் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்துவார். அதனால், வருமானத்தில் குறைவையும் ஏற்படுத்துவார். இணக்கமாக இருந்த கூட்டாளிகளும் உங்களைவிட்டு பிரிந்துசென்று தனித்து செயல்படக்கூடிய நிலையினையும் உண்டாக்குவார். மனதில் இனம் புரியாத பயத்தை ஏற்படுத்துவார். கண்களில் பாதிப்பை ஏற்படுத்துவார். இரத்தக் கொதிப்பு, சர்க்கரை என்று பாதிப்பு தோன்றும். வம்பு வழக்குகளை சந்திக்க வேண்டிவரும். தந்தை மகன் உறவில் விரிசல் வரும். அளவிற்கு மீறிய சங்கடங்களை அனுபவிக்க நேரும். நண்பர்கள் உறவினர்கள் பகையாளியாக மாறுவார்கள். குடும்பத்தில் துக்ககரமான சம்பவங்கள் நிகழ்வதுடன் மனதில் மரண பயம் இருந்து வரும். கணவன் மனைவிக்குள் முட்டல் மோதல் என்ற நிலை உருவாகும். தவறான நண்பர்களின் சேர்க்கையால் குடும்பத்திற்குள் பிரச்சனைகள் உண்டாகும். கல்வி

கற்போர்க்கு கல்வியில் தடையும் மந்த நிலையும் ஏற்படும். பொன் பொருட்களில் குறைவும், கடன் வாங்க வேண்டிய நிலையும் ஏற்படும். பொதுவில் ஜென்ம சனியானது உங்களை எழ முடியாத அளவிற்கு கட்டிப்போடும்.

உங்கள் ராசிக்கு லாபாதிபதியும், விரயாதிபதியும் சனி பகவானே என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை வழங்கிட வேண்டியவராகிறார். பொதுவாகவே 12 வீடுகளில் சஞ்சரிக்கக்கூடிய நவகிரகங்களும் அவர்கள் சஞ்சரிக்கும் வீட்டிற்கு ஏற்பவும், அவர்கள் பார்க்கும் ஸ்தானங்களுக்கு ஏற்பவும் பலன்களை வழங்கிடக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

## சகாய ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

தன்னுடைய மூன்றாம் பார்வையால் உங்கள் சகோதர, தைரிய, சகாய, கீர்த்தி ஸ்தானத்தை சனி பகவான் பார்ப்பதால், உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். நம்மால் முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். இதுவரையில் தொழில், வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகும். திட்டமிட்டு செயல்பட்டு சாதனைகள் புரியக்கூடிய அளவிற்கு உங்கள் மன நிலையில் முன்னேற்றம் உண்டாகும். சமூகப்பணியில் ஆர்வம் அதிகரிக்கும். பொறுப்புள்ள பதவிகளில் அமரக்கூடிய நிலை ஒரு சிலருக்கு உண்டாகும். அரசியல் ஈடுபாடு உடையவர்களுக்கு எதிர்பார்த்த பதவியும் பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். கட்டிடப் பணிகளில் இருந்து வந்த குறைபாடு நீங்கும். சகோதர வழியில் ஒத்துழைப்பு கூடும். பல்வேறு நன்மைகள் ஏற்படும். எடுத்த காரியத்தில் வெற்றியையும், தொழிலில் முன்னேற்றத்தையும் காண்பீர்கள். உங்கள் அறிவும் வீரமும் இக்காலத்தில் பளிச்சிடும். சிறப்பும் புகழும் உண்டாகும். செழிப்பும் சந்தோஷமும் அதிகரிக்கும்.

## களத்திர ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

சனி பகவானின் ஏழாம் பார்வை உங்கள் ராசிக்கு, களத்திர, நட்பு ஸ்தானத்திற்கு ஏற்படுவதால் இக்காலத்தில் குடும்பத்தில் சலசலப்புகள், சங்கடங்கள் ஏற்படும். பொதுவாக மீன ராசியினருக்கு ஏழாம் வீட்டு அதிபதி பாதகாதிபதி என்பதால் திருமண வாழ்க்கை என்பது போராட்ட வாழ்க்கையாகவே இருக்கும். எதிர் எதிர் துருவங்களை இணைத்து வைத்ததுபோல் மாறும். இக்காலத்தில் கர்மக்காரகனும் 11ம் இடத்தின் அதிபதியுமான சனி பகவானின் பார்வை களத்திர ஸ்தானத்திற்கு உண்டாவதால், வாழ்க்கைத்துணைக்கும் உங்களுக்கும் பிரச்சனைகள் அதிகரிக்கும். சாதரணமான பேச்சும் வம்பில் கொண்டுபோய்விடும். புதியதாக வரும் நட்பால் உங்கள் வாழ்க்கை வேறு பாதையில் செல்ல ஆரம்பிக்கும். ஒருசிலர் தீயோர் சேர்க்கைக்கும் ஆளாவீர்கள். கெட்ட நடத்தை உடையவர்கள் உங்கள் மனதை மாற்றுவார்கள். அவர்களால் உங்கள் வாழ்க்கைமாறும். தொல்லை, நோய், அவமானம், பொருள்சேதம், வீண் கவலை என்ற நிலையும்

உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் உடல் நிலையும் ஒருநேரம் இருப்பதுபோல் மறுநேரம் இல்லாமல் கவலையை உண்டாக்கும். ஒரு சிலர் குடும்பத்தை விட்டு விலக வேண்டிய நிலையும் ஏற்படும். கல்வி கற்போர் கல்வியில் அதிக கவனம் செலுத்தினால் மட்டுமே இக்காலத்தில் வெற்றி அடைய முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் கவனம் செலுத்த முடியாமல் பல்வேறு நெருக்கடிகள் உண்டாகும். அடிக்கடி வெளியூர் பயணம் ஏற்படும். வயிறு மார்பு சம்பந்தமான நோய்கள் உண்டாகும்.

## ஜீவன ஸ்தானத்திற்கு சனிப்பார்வை

தொழில் காரகனான சனிபகவான் தன் பத்தாம் பார்வையை உங்கள் ராசிக்கு பத்தாம் இடமான ஜீவன ஸ்தானத்தின் மீது செலுத்துகிறார். காரகனின் பார்வை பாவகத்திற்கு ஏற்படும் இக்காலம் மிகவும் கவனமாக செயல்பட வேண்டிய காலமாகும். இக்காலத்தில் நீங்கள் செய்துவரும் தொழிலில் மந்த நிலையை ஏற்படுத்துவார். பார்த்துவரும் வேலையில் பிரச்சனைகளை அதிகரிப்பார். புதிய முயற்சிகளில் நெருக்கடியை உண்டாக்குவார். எதிர்பார்த்த லாபத்தை அடைய முடியாத நிலையை உருவாக்குவார் உங்கள் செல்வாக்கு, கௌரவம், அந்தஸ்து போன்றவற்றுக்கு பங்கத்தை ஏற்படுத்துவார். இவையெல்லாம் ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் சனிபகவானால் நிகழக்கூடிய பொதுப்பலன்களாகும். ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் இரண்டரை ஆண்டு காலமும் ஒரே நிலையில் சஞ்சரிப்பதில்லை. ஆண்டிற்கு ஒரு மாதம் அஸ்தமனம் அடைவார். நான்கு மாதங்கள் வக்கிர கதியை அடைவார். அந்தக்காலங்களில் மேலே சொன்ன பலன்கள் முற்றிலும் மாறுபடும். நன்மைகள் அதிகரிக்கும். சங்கடங்கள் விலகும்.

## அதிர்ஷ்டம் தரும் அஸ்தமன சனி!

சனி பகவான் ஒரு ராசிக்குள் இரண்டரை ஆண்டுகாலம் சஞ்சரிப்பதால் அக்காலங்களில் அவர் ஆண்டிற்கு ஒருமுறை அஸ்தமனமாவார், அக்காலம் சனி பகவானால் ஏற்பட்ட சங்கடங்களில் இருந்து அந்த ஜாதகருக்கு விடுதலை உண்டாகும். நன்மைகள் உண்டாகும். அந்த வகையில் மீன ராசியில் ஜென்ம சனியாக சஞ்சரித்து வரும் சனி பகவான் 12.3.2026 முதல் 11.4.2026 வரையிலும், 25.3.2027 முதல் 24.4.2027 வரையிலுமான காலங்களில் உங்களுக்கு நிம்மதியான நிலை ஏற்படும். எடுக்கும் வேலைகள் வெற்றியாகும். நினைத்த காரியங்கள் நடந்தேறும்.

## வளம்தரும் வக்கிர சனி!

ஏழரை சனி நடைபெறும் காலத்தில் சனி பகவான் வக்கிரமடையும் காலம் ஜாதருக்கு நன்மையான காலமாகும். இக்காலத்தில் முன்புபோல் அவரால் செயல்பட முடியாமல் போகும்

என்பதால் 15.7.2026 முதல் 31.11.2026 வரையிலும், 28.7.2027 முதல் 13.12.2027 வரையிலுமான வக்கிர காலத்தில் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். உங்கள் செயலில் முன்னேற்றம் உண்டாகும். தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் முடிவிற்குவரும். தடைபட்டிருந்த வேலைகள் ஒவ்வொன்றாக நடைபெறும். உங்கள் மனம் தெளிவடையும். இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வந்ததுபோல் உணருவீர்கள். எல்லாவற்றிலும் திட்டமிட்டு செயல்படுவீர்கள். எதிர்ப்பு விலகும். உங்கள் திறமை இக்காலத்தில் வெளிப்படும். உங்களுக்கு எதிராக பேசியவர்களும் செயல்பட்டவர்களும் மனம் மாறுவர்.

## ஜென்ம சனிக்கு குருவின் சுபத்துவம்!

மீன ராசியில் உள்ள பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரங்களில் நீங்கள் பிறந்திருந்தாலும் உங்கள் ராசிநாதன் குரு பகவானே ஆவார். குரு பகவான் பார்க்கும் இடங்கள் சுபிட்சம் அடையும் என்பது பொது விதி! இக்காலத்தில் உங்கள் ராசிநாதனான குரு பகவான் வீட்டில்தான் சனி பகவான் சஞ்சரிக்கிறார்! அதனால், பெருமளவில் உங்களுக்கு சங்கடங்களை ஏற்படுத்த மாட்டார், நெருக்கடிக்கு நீங்கள் ஆளாக மாட்டீர்கள் என்றாலும் கர்மக்காரகன் அவருடைய வேலைகளையும் செய்து கொண்டிருப்பார். ஆனால், குருவின் பார்வை அவருக்கு கிடைக்கின்ற போது அவர் உங்களுக்கு வழங்கும் பாதகமான பலன்களை அவரால் தொடர முடியாமல் போகும். அந்த ரீதியில், 26.5.2026 முதல் 20.10.2026 வரையிலும், 13.2.2027 முதல் 13.6.2027 வரையிலும், 16.11.2027 முதல் 17.4.2028 வரையிலுமான காலங்களில் மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானுக்கு குருப்பார்வை உண்டாவதால் இக்காலங்கள் உங்களுக்கு நன்மையான காலங்களாக மாறும் உங்களுடைய எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் தடைபட்டிருந்த வேலைகள் நடந்தேறும். குடும்பத்தில் சுபிட்சமான நிலை இருக்கும் சுப காரியங்கள் நடந்தேறும் ஒரு சிலருக்கு புதிய இடம் வீடு வாகனம் வாங்கும் முயற்சி வெற்றியாகும்.

## பரிகாரம்

சனிக்கிழமை காலையில் நவகிரகத்தை 108 சுற்று வந்து மனமுருகி வணங்கி வழிபடுங்கள். அகத்திக்கீரையை வாழைப்பழம், வெல்லத்துடன் பசு மாட்டிற்கு வழங்கு வதுடன், தயிர் சாதத்தில் எள் கலந்து காக்கைகளுக்கும், முதியவர்களுக்கும் வழங்கி அவர்களின் பசியாற்றுவ துடன், திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு ஆகிய சனி ஸ்தலங்களுக்கு ஒருமுறை சென்று வருவது நன்மையளிக்கும்.

**மேலும் சந்தேகங்களுக்கு 9444393717 எண்ணில் தொடர்பு கொள்ளவும்!**